தயங்கி குழம்பி நிற்காதே..! முடிவெடு..!!

# FULL TEST

1.கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பம் எது?
A) கலங்கரை விளக்கம்
B) கலம்
C) ரேடார்
D) சோனார்
Explanation
- கடலும் கடல்சார்ந்த இடமும் தமிழரின் வாழ்நிலங்களுள் ஒன்று. கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பமே கலங்கரை விளக்கம். இது குறித்துச் சங்கப் பாடல் குறிப்பிடுகிறது

2.பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்?
A) கடியலூர் உருத்திரங்கண்ணனார்
B) தொண்டைமான் இளந்திரையன்
C) ராஜராஜ சோழன்
D) கரிகாலச் சோழன்
Explanation
- கடியலூர் உருத்திரங் கண்ணனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.

3.பொருத்துக.
அ. எத்தனிக்கும் – 1. சமம்
ஆ. வெற்பு – 2. வயல்
இ. கழனி – 3. மலை
ஈ. நிகர் – 4. முயலும்
A) 4, 3, 2, 1
B) 3, 4, 2, 1
C) 4, 2, 3, 1
D) 4, 3, 1, 2
Explanation
- எத்தனிக்கும் – முயலும்
  வெற்பு – மலை
  கழனி – வயல்
  நிகர் – சமம்

4.சரியானதைத் தேர்க
A) உரவுநீர் – பெருநீர்பரப்பு
B) கரையும் – தடுக்கும்
C) மதலை – மாடம்
D) வேயாமாடம் – ஓலையால் வேயப்பட்டது.
Explanation
- உரவுநீர் – பெருநீர்பரப்பு
  கரையும் – அழைக்கும்
  மதலை – தூண்

5.வேயாமாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது. திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம் பாரதிதாசனின் எந்த நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது?
A) குடும்ப விளக்கு
B) பாண்டியன் பரிசு
C) கண்ணகி புரட்சிக் காப்பியம்
D) பிசிராந்தையார்
Explanation

- பாரதிதாசனின் பிசிராந்தையார் என்ற நூலுக்கு சாகித்த அகாடமி விருது அளிக்கப்பட்டது. இவர் கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்

6.பொருந்தாததைத் தேர்க

A) மதுரைக் காஞ்சி

B) புறநானூறு

C) நெடுநல்வாடை

D) குறிஞ்சிப்பாட்டு

Explanation

- புறநானூறு என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. மற்றவை பத்துப்பாட்டு நூல்கள்.பத்துப்பாட்டு நூல்கள்: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்

7.அழியாத செல்வம் எது?

A) பணம்

B) பொருள்

C) கல்வி

D) நகை

Explanation

- உலகில் பலவகையான செல்வங்கள் உள்ள. அவற்றுள் அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஆகும். பிற செல்வங்கள் அனைத்தும் அழியும் தன்மை உடையது.

8.பொருந்தாததைத் தேர்க.

A) அழகின் சிரிப்பு

B) இசையமுது

C) இருண்டவீடு

D) மலைக்கள்ளன்

Explanation

- மலைக்கள்ளன் என்பது நாமக்கல் கவிஞர் இயற்றிய நூலாகும். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம், பிசிராந்தையார் ஆகியவை பாரதிதாசனின் படைப்புகள் ஆகும்.

9.பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது?

A) மயில்

B) குயில்

C) கிளி

D) அன்னம்

Explanation

- “ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம்” என்னும் வரிகளில் பெண்கள் மயில்களுக்கு நிகர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

10.உலகிலுள்ள உயிரினங்களுள் தனித்தன்மை உடையது எது?

A) தாவரம்

B) விலங்கு

C) பூஞ்சை

D) மனிதன்

Explanation

- உலகிலுள்ள உயிரினங்களுள் தனித்தன்மை உடையது மனிதன் ஆகும். ஏனெனில் மனிதனுக்கு தான் எதிர்காலம் என சொல்ல முடியது

தயங்கி குழம்பி நிற்காதே..! முடிவெடு..!!

11.சினையின்(உறுப்பின்) பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகிவருவது?
A) சினையாகு பெயர்
B) பொருளாகு பெயர்
C) தொழிலாகு பெயர்
D) இடவாகு பெயர்
Explanation
- சினை என்றால் உறுப்பு என்று பொருள். சினையின் பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.

12. இரட்டைக் கிளவி பற்றிய கூற்றுகளை ஆராய்க.
1. சொற்கள் இரட்டையாக வரும்
2. பிரித்தால் பொருள் தரும்
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டம் தவறு
Explanation
- இரட்டைக் கிளவி என்பது சொற்கள் இரட்டையாக இணைந்த வந்து, பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்கள் ஆகும். (எ.கா) சலசல, விறுவிறு, மளமள

13.ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படுவது எது?
A) திருக்குறள்
B) இல்பொருள் உவமையணி
C) இரட்டுற மொழிதல்
D) B மற்றும் C
Explanation
- ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும் படி பாடப்படுவது இரட்டுற மொழிதல் ஆகும். இதனைச் “சிலேடை” என்றும் கூறுவர்.

14. சிலேடைப் பாடுவதில் வல்லவர் யார்?
A) இராமச்சந்திரக் கவிராயர்
B) கபிலர்
C) நக்கீரர்
D) காளமேகப்புலவர்
Explanation
- சிலேடை அல்லது இரட்டுறமொழிதல் பாடலைப் பாடுவதில் வல்லவர் கவி காளமேகப்புலவர்

15.அடுக்குத் தொடர் எதன் காரணமாக தோன்றாது?
A) விரைவு
B) வெகுளி
C) உவகை
D) அடைமொழி
Explanation
- அடுக்குத் தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வரும். அடைமொழியாக வருவது இரட்டைக் கிளவி ஆகும்.

16.பொருத்துக.

| | |
|---|---|
| அ. பிருமாக்கள் | – 1. குழந்தை |
| ஆ. நெடி | – 2. அழகு |
| இ. மழலை | – 3. நாற்றம் |
| ஈ. வனப்பு | – 4. படைப்பாளர்கள் |

A) 4, 3, 1, 2
B) 4, 3, 2, 1
C) 3, 4, 1, 2

D) 3, 2, 1, 4

Explanation

- பிருமாக்கள் – படைப்பாளர்கள்
  நெடி – நாற்றம்
  மழலை – குழந்தை
  வனப்பு – அழகு

17.“கேடில் விழுச்செல்வம் ___ ஒருவற்கு”
மாடல்ல மற்ற யவை” – குறளை நிறைவு செய்க.

A) கல்வி
B) அன்பு
C) அறம்
D) ஒழுக்கம்

Explanation

- “கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற யவை” என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது கல்வி, மட்டுமே அழியாச் செல்வம் மற்ற அனைத்து செல்வங்களும் அழிந்துவிடும் என்பது இதன் பொருள்.

18.‘திருவானக்கா உலா’ என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) குமரகுருபரர்
B) கபிலர்
C) கண்ணதாசன்
D) காளமேகப்புலவர்

Explanation

- காளமேகப்புலவரின் நூல்கள் – திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல்

19.கடையெழு வள்ளல்களுள் ஒருவரான பாரியின் புதல்வியர் பாணர்களுக்குப் புதுமையான உணவு அளித்த செய்தியைக் கூறும் நூல் எது?

A) அகநானூறு
B) புறநானூறு
C) பழமொழி நானூறு
D) ஏலாதி

Explanation

- கடையெழு வள்ளல்களுள் ஒருவரான பாரியின் புதல்வியர் பாணர்களுக்குப் புதுமையாக உணவு அளித்த செய்தியைக் கூறும் நூல் பழமொழி நானூறு. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

20.பொருத்துக

அ. சாந்தம் – 1. சிறப்பு
ஆ. மகத்துவம் – 2. உலகம்
இ. தாரணி – 3. கருணை
ஈ. இரக்கம் – 4. அமைதி

A) 4, 1, 2, 3
B) 1, 4, 2, 3
C) 3, 2, 4, 1
D) 2, 4, 1, 3

Explanation

- சாந்தம் – அமைதி
  மகத்தும் – சிறப்பு
  தாரணி – உலகம்
  இரக்கம் – கருணை

21.அடைமொழியாய் குறிப்புப் பொருளில் வருவது?

A) இரட்டைக் கிளவி
B) அடுக்குத் தொடர்

C) ஆகுபெயர்
D) அன்மொழித்தொகை
Explanation
- இரட்டைக் கிளவி வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும். இவை பிரித்தால் பொருள் தராது.

22.அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு_____விருது வழங்கியது?
A) பத்ம ஸ்ரீ
B) பாரத ரத்னா
C) பத்மவிபூசண்
D) பத்மபூசன்
Explanation
- அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு பாரத ரத்னா விருது வழங்கியது. இவருக்கு 1990ஆம் வழங்கப்பட்டது. பாரத ரத்னா, தமிழில் இந்திய மாமணி என்று அழைக்கப்படுகிறது

23. கவியரசு என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்?
A) கண்ணதாசன்
B) வாணிதாசன்
C) பாரதிதாசன்
D) சுப்பு ரத்தின தாசன்
Explanation
- முத்தையா என்னும் இயற்பெயர் கொண்ட கண்ணதாசன் கவியரசு என்னும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுகிறார்

24.யாருடைய கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்?
A) நா. பிச்சமூர்த்தி
B) தேனாண்டாள்
C) ஔவையார்
D) தேனரசன்
Explanation
- தேனரசன் தமிழராசிரியராக பணியாற்றியவர் இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்

25.கன்னிப்பாவை என்னும் எந்த நூலை தழுவி எழுதப்பட்டது?
A) திருப்பாவை
B) திருவெம்பாவை
C) திருவாசகம்
D) மேற்கண்ட எதுவுமில்லை
Explanation
- ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி கன்னிப்பாவை என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது.

26.அன்னை பூமி என்னும் புதினத்தை எழுதிய கோமகளின் இயற்பெயர் என்ன?
A) இராஜலட்சுமி
B) ஜெயலட்சுமி
C) கல்யாணி
D) அங்கையற்கண்ணி
Explanation
- கோமகளின் இயற்பெயர் இராஜலட்சுமி ஆகும். இவர் சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார்

27.கூற்றுகளை ஆராய்க.
1. இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.
2. குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு
Explanation
- குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். எ.கா. ந, நம், நா, நாம். இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. கட, கடல், கடா, கடாம்.

28.தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் முதன்மையானது எது?
A) அறநெறி
B) பண்பு
C) விருந்தோம்பல்
D) கொடைத்திறன்
Explanation
- தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும். தம்மிடம் இல்லாவிட்டாலும் இருப்பதை விருந்தினருக்குத் தந்து மகிழ்ந்த நிகழ்வுகளைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன.

29.திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
A) 1000
B) 2000
C) 3000
D) 4000
Explanation
- திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக்கொண்டது. திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

30. கள்ளக் கருத்துக்களை கட்டேர்டு அறுத்தவர்க்கு
உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பாராபரமே – இப்பாடலடி இடம்பெற்ற நூல்?
A) திருமந்திரம்
B) எக்காளக் கண்ணி
C) குணங்குடியார் பாடற்கோவை
D) தாயுமானவர் பாடல்கள்
Explanation
- கள்ளக் கருத்துக்களை கட்டேர்டு அறுத்தவர்க்கு உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பாராபரமே – குணங்குடியார் பாடற்கோவை. பொதுவாக பராபரம் என்ற சொல்லை பாடலடியில் அமைத்து பாடுபவர் தாயுமானவர். இவர் பாடல் மீது கொண்ட பற்றின் காரணமாக குணங்குடி மஸ்தான் சாகிபு பாராபரம் என்ற சொல்லை தமது பாடலிலும் இடம்பெறச் செய்தார்

31.சங்க இலக்கியங்கள் பலவும் எந்த பாவகையால் அமைந்துள்ளது?
A) வெண்பா
B) ஆசிரியப்பா
C) கலிப்பா
D) வஞ்சிப்பா
Explanation

- பா நான்கு வகைப்படும். அவை,
  1. வெண்பா
  2. ஆசிரியப்பா
  3. கலிப்பா
  4. வஞ்சிப்பா

  ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.

32.வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி – இவ்வரிகளில் கரி என்ற சொல்லின் பொருள்?
A) யானை
B) குதிரை
C) கருமை நிறம்
D) ஊண்
Explanation
- கரி என்றால் யானையைக் குறிக்கும். வேழம் என்றாலும் யானை ஆகும்.
  களிறு – ஆண் யானை
  பிடி – பெண் யானை

33.இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை என போற்றப்படுபவரின் பெற்றோர் யார்?
A) பீமாராவ்-பீமாபாய்
B) ராம்ஜி சக்பால்-பீமாபாய்
C) பீமாராவ் அம்பேத்கர்- பீமாபாய்
D) பீமாராவ் ராம்ஜி-பீமாபாய்
Explanation
- விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் அம்பேத்கர் ஆவார். இவரின் பெற்றோர் பெயர் ராம்ஜி சக்பால்-பீமாபாய்.

34.முன்னூறு வருடமாய் முற்றுகையிட்ட அந்நிய இருட்டின் அரக்கக் கூத்து முடிந்தது – இதில் குறிப்பிடப்படுபவர் யார்?
A) மன்னர்கள்
B) இந்திய மக்கள்
C) ஆங்கிலேயர்கள்
D) இந்திய அரசு
Explanation
- முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்று ஆங்கிலேயர்களின் ஆட்சி பற்றி மீரா குறிப்பிடுகிறார்

35.“ஒன்றுறா முன்றிலோ இல்” என்ற பழமொழியின் பொருள் என்ன?
A) மூன்றில் ஒன்று இல்லை
B) மூன்றில் ஒரு பங்கு
C) ஒன்றுமில்லை
D) ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை
Explanation
- “ஒன்றுறா மூன்றிலோ இல்” என்ற பழமொழி ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்ற பொருளை உணர்த்துகிறது.

36.கூற்று: மக்கள் திலகம், புரட்சி நடிகர் என்று மக்களால் அழைக்கப்பட்டவர் – எம்.ஜி. ஆர்
காரணம்: பள்ளிகளில் பசியுடன் படிக்கும் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்தார் எம்.ஜி. ராமச்சந்திரன்.
A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காணரம் சரி
C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.

Explanation

- மக்கள் திலகம், புரட்சி நடிகர் என்று மக்களால் அழைக்கப்பட்டவர் – எம்.ஜி. ஆர். காரணம் தாம் ஏற்று நடித்த கதைமாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்

37. “தொட்டணைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றணைத்து ஊறும் அறிவு” – இதில் பயின்று வந்துள்ள அணி என்ன?
A) உவமை அணி
B) எடுத்துகாட்டு உவமை அணி
C) சொற்பொருள் பின்வருநிலை அணி
D) பொருள் பின்வருநிலை அணி

Explanation

- உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துகாட்டு உவமை அணி.
  இக்குறளிலுள்ள,
  உவமை – தொட்டனைத்து ஊறும் மணற்கேணி
  உவமேயம் – மாந்தர்க்கு கற்றனைத்து ஊறும் அறிவு
  உவம உருபு – ‘அது போல’ என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

38.பொருத்துக.
அ. தகளி – 1. அறிவு
ஆ. ஞானம் – 2. திருமால்
இ. நாரணன் – 3. அகல்விளக்கு
A) 3, 2, 1
B) 2, 1, 3
C) 1, 3, 2
D) 3, 1, 2

Explanation

- தகளி – அகல்விளக்கு
  ஞானம் – அறிவு
  நாரணன் – திருமால்

39.எம்.ஜி.ஆர்-க்கு எந்த பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது?
A) அண்ணா பல்கலைக்கழகம்
B) அண்ணாமலை பல்லைக்கழகம்
C) இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம், சென்னை
D) சென்னைப் பல்கலைக்கழகம்

Explanation

- சென்னைப் பல்கலைக் கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கியது

40.பொய்கையாழ்வார் பிறந்த இடம் எது?
A) மதுரை
B) காஞ்சிபுரம்
C) திருச்சி
D) திருப்பதி

Explanation

- பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தார்.

41.நாலாயிர திவ்வியப் பிரபந்தம் யாரால் பாடப்பட்டது?

A) சமணர்கள்
B) ஆழ்வார்கள்
C) பௌத்தர்கள்
D) மாணிக்கவாசகர்

Explanation

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் நூலை 12 ஆழ்வார்கள் சேர்ந்து உருவாக்கினார்கள். ஆழ்வார்கள் என்பவர்கள் திருமாலின் மீது பற்றுக் கொண்டவர்கள்

42.சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே – என்று பாடியவர் யார்?
A) அதியமான்
B) ஔவையார்
C) தொண்டைமான்
D) கபிலர்

Explanation

- கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நீண்ட நாள் நோயின்றி வாழ வைக்கும் அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது ஔவைக்கு வழங்கினார். அதனை பெற்ற ஔவையார் மனம் மகிழ்ந்து மேற்கண்ட வரிகளை பாடினார்.

43.உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவது எவ்வகை அணி?
A) எடுத்துகாட்டு உவமை அணி
B) பின்வருநிலையணி
C) இல்பொருள் உவமையணி
D) உருவக அணி

Explanation

- காளை கொம்பு முளைத்த குதிரை போல் பாய்ந்து வந்தது. இத்தொடரில் 'கொம்பு முளைத்த குதிரை போல்' என்னும் உவமை வந்துள்ளன. உலகில் உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

44. "மலரன்ன பாதம்" – இத்தொடரைக் கொண்டு பின்வருவனவற்றுள் பொருந்தாததை தேர்க.
A) உவமை – மலர்
B) உவமேயம் – பாதம்
C) உவம உருபு – இன்ன
D) உவம உருபு – அன்ன

Explanation

- உவமை – மலர்
  உவமேயம் – பாதம்
  உவம உருபு – அன்ன

45. கலிங்கத்தப் பரணி பற்றிய கூற்றுகளை ஆராய்க.
1. இது 96 வகை சிற்றிலங்கியங்களில் ஒன்றாகும்.
2. தமிழில் தோன்றிய முதல் பரணி இதுவே.
3. கலித்தாழிசையால் இயற்றப்பட்டது
4. 499 தாழிசைகள் கொண்டது.
A) 1, 3 சரி
B) 1, 2, 3 சரி
C) 1, 3, 4 சரி
D) அனைத்தும் சரி

Explanation

1. இது 96 வகை சிற்றிலங்கியங்களில் ஒன்றாகும்.
2. தமிழில் தோன்றிய முதல் பரணி இதுவே.
3. கலித்தாழிசையால் இயற்றப்பட்டது
4. 599 தாழிசைகள் கொண்டது.

46. தகடூர் யாத்திரை என்ற நூலின் ஆசிரியர் யார்?
A) அதியமான் நெடுமானஞ்சி
B) ஔவையார்
C) பிசிராந்தையார்
D) ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை

Explanation
- தகடூர் யாத்திரை என்ற நூலின் ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.

47. இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார என்ற வரியில் வித்து என்ற சொல்லின் பொருள்?
A) விற்றல்
B) விளைவித்தல்
C) பயிர் முளைத்தல்
D) விதை

Explanation
- வித்து என்றால் விதை என்று பொருள். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் தகடூர் யாத்திரை. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

48.தகடூர் யாத்திரை என்னும் நூலின் சில பாடல்கள் எந்த நூலின் வாயிலாக அறிய முடிகிறது?
A) தனிப்பாடல் திரட்டு
B) புறப்பாடல் திரட்டு
C) அகப்பொருள் விளக்கம்
D) புறநானூறு

Explanation
- தகடூர் யாத்திரை என்னும் நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. தகடூர் என்பது தற்போதைய தர்மபுரி ஆகும்.

49.கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – என்ற பாடலடிகள் இடம் பெற்ற செய்யுள்?
A) நீதிநெறிவிளக்கம்
B) பழமொழி நானூறு
C) அகநானூறு
D) கலித்தொகை

Explanation
- கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – என்ற பாடலடிகள் இடம் பெற்ற நூல் நீதிநெறிவிளக்கம்.

50. நீதிநெறி விளக்கம் என்ற நூலின் ஆசிரியர்?
A) ஔவையார்
B) குமரகுருபரர்
C) கபிலர்
D) ஒட்டக்கூத்தர்

Explanation

- நீதி நெறி விளக்கம் என்னும் நூலை எழுதியவர் – குமரகுருபரர். மக்களுக்கு தேவையான நீதிகளைக் சுட்டிக் காட்டுவதால் இந்நூல் நீதிநெறிவிளக்கம் என்று அழைக்கப்பட்டது.

51. ஏட்டுக் கல்வி மட்டுமின்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. என்று தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தை கூறியவர்?
A) மு. வரதராசனார்
B) அண்ணா
C) கண்ணதாசன்
D) திரு.வி.க
Explanation
- ஏட்டுக் கல்வி மட்டுமின்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும் என்று தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தை திரு.வி.க கூறியுள்ளார்.

52.பொருத்துக
அ. கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – புறநானூறு
ஆ. மாக்கண் முரசம் – மதுரைக்காஞ்சி
இ. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்;ந்த பந்தர்கீழ் – நாச்சியார் திருமொழி
ஈ. சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – பெரியபுராணம்
A) 1, 2, 3, 4
B) 3, 4, 2, 1
C) 4, 2, 3, 1
D) 4, 3, 2, 1
Explanation
அ. கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – புறநானூறு
ஆ. மாக்கண் முரசம் – மதுரைக்காஞ்சி
இ. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்கீழ் – நாச்சியார் திருமொழி
ஈ. சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – பெரியபுராணம்

53.பெருநீரால் வாரி சிறக்க! இரு நிலத்து என்ற வரியில் பெருநீரால் என்ற சொல்லின் பொருள் என்ன?
A) மழைநீர்
B) கடல்நீர்
C) கிணற்று நீர்
D) ஆற்று நீர்
Explanation
- பெருநீர் என்றால் இங்கு மழைநீரைக் குறிக்கிறது. சேர மன்னரின் அகன்ற பெரிய நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குக என்பதே இப்பாடல் வரிகள் உணர்த்தும் செய்தி.

54.கலித்தொகையை தொகுத்தவர்?
A) பாரதம் பாடிய பெருந்தேவனார்
B) நல்லந்துவனார்
C) பெருங்கடுங்கோ
D) கபிலர்
Explanation
- கலித்தொகை என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இதனை தொகுத்தவர் நல்லந்துவனார். இவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர்.

55. ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் – இதில் அலந்தவர் என்ற சொல்லின் எதிர்ச்சொல்?
A) செல்வந்தர்
B) வறியவர்
C) உறவினர்
D) அறிவற்றவர்
Explanation
- அலந்தவர் என்ற சொல்லின் பொருள் வறியவர் என்பதாகும். இதன் எதிர்ச்சொல் செல்வந்தர். இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல் என்பதே மேற்கண்ட பாடல் வரி உணர்த்தும் பொருள்

56.ஆலங்குடி சோமு எங்கு பிறந்தார்?
A) இராமநாதபுரம்
B) சிவகங்கை
C) விருதுநகர்
D) புதுக்கோட்டை
Explanation
- ஆலங்குடி சோமு திரைப்படப் பாடல் ஆசிரியராகப் புகழ்பெற்றவர். இவர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்.

57. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது?
A) கல்வி
B) உணர்ச்சிகள்
C) கைகள்
B) எதுவுமில்லை
Explanation
- கேடில் விழுச்செல்வம் கல்வி. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது.

58.பொருத்துக
அ. நித்தம் நித்தம் – 1. பாதுகாத்தல்
ஆ. திட்டு முட்டு – 2. நாள்தோறும்
இ. சுண்ட – 3. நன்கு
ஈ. பேணுவையேல் – 4. தடுமாற்றம்
A) 1, 2, 3, 4
B) 3, 2, 1, 4
C) 2, 3, 4, 1
D) 2, 4, 3, 1
Explanation
- நித்தம் நித்தம் – நாள்தோறும்
  திட்டு முட்டு – தடுமாற்றம்
  சுண்ட – நன்கு
  பேணுவையேல் – பாதுகாத்தல்

59.ஐஞ்பெருங்காப்பியங்களில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க?
A) வளையாபதி
B) நீலகேசி
C) சீவக சிந்தாமணி
D) சிலப்பதிகாரம்
Explanation

- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். இதில் நீலகேசி என்பது ஐஞ்சிறுங்காப்பியம் ஆகும்.

60. உடல்நலம் என்பது______இல்லாமல் வாழ்தல் ஆகும்?
A) அணி
B) பணி
C) பிணி
D) மணி
Explanation
- உடல்நலம் என்பது பிணி இல்லாமல் வாழ்வதாகும். பிணி என்றால் துன்பம் என்று பொருள்

61.தமிழச்சி என்ற நூலை எழுதியவர் யார்?
A) கண்ணதாசன்
B) மருதகாசி
C) பாரதிதாசன்
D) வாணிதாசன்
Explanation
- தமிழச்சி என்னும் நூலை எழுதியவர் வாணிதாசன். இவரின் இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு ஆகும்.

62.உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து
உழன்று உழன்றுமெத்த அடித்ததினால்" – இதில் முகில் என்பதன் பொருள் என்ன?

A) மழை
B) காற்று
C) புயல்
D) மேகம்
Explanation
- இப்பாடலில் முகில் என்பது மேகத்தைக் குறிக்கிறது. மேகத்தை குறிக்கும் மற்றொரு சொல் கொண்டல்.

63. கோணகாத்து என்னும் பாடலை எழுதியவர்?
A) வெங்கம்பூர் சாமிநாதன்
B) புலவர் செ. இராசு
C) பக்தவத்சல பாரதி
D) வாணிதாசன்
Explanation
- கோணக்காத்துப் பாட்டு என்னும் பாடலை எழுதியவர் வெங்கம்பூர் சாமிநாதன் ஆவார். இதில் புயல் காற்று வீசும் போது ஏற்படும் சூழ்நிலைகள் பற்றி இப்பாடலில் விளக்கியுள்ளார் இதன் ஆசிரியர்.

64.யாருக்கு அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் தேவையில்லை?
A) பொருள் வைத்திருப்பவர்க்கு
B) கல்வி கற்றவருக்கு
C) பொலிவுடன் இருப்பவருக்கு
D) பெண்களுக்கு
Explanation
- கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

65.நோயை ஓட்டி நூறு வயது தரும் என்று கவிமணி கூறும் கருத்துகளில் பொருந்தாதது?
A) தூய காற்று

B) பசித்தபின் உணவு
C) மூலிகைகள்
D) நன்னீர்
Explanation

- தூய காற்றும் நன்னீரும்,
  சுண்டப் பசித்த பின் உணவும்
  நோயை ஓட்டி விடும்அப்பா!
  நூறு வயதும் தரும்அப்பா! என்பது கவிமணியின் வரிகள். இதில் நோயை ஓட்டும் வழிகளாக கவிமணி கூறுவன,
  1. தூய கற்று
  2. நன்னீர்
  3. சுண்டப்பசித்த பின் உணவு

66.பழந்தமிழர்களிடையே வெற்றியைக் கொண்டாட ___ என்னும் தெய்வத்தை வணங்குவது மரபாக இருந்தது.
A) திருமால்
B) வருணன்
C) கொற்றவை
D) இந்திரன்
Explanation

- கொற்றவை – பெண் தெய்வம்
  இயற்கைப் பொருள்களான ஞாயிறு, நிலவு, நெருப்பு முதலானவற்றையும் பழந்தமிழர்கள் வணங்கினர். வீரத்தை உணர்த்த வீரர்களுக்கு ‘ நடுகல் வழிபாடு ‘ செய்வதும் வழக்கத்தில ல் இருந்தது

67.பொருத்துக.
அ. சென்னை, வடசென்னை – 1. கூவம்
ஆ. மத்திய சென்னை – 2. கொற்றலை
இ. தென்சென்னை – 3. அடையாறு
A) 1, 2, 3
B) 2, 1, 3
C) 3, 1, 2
D) 2, 3, 1
Explanation

- சென்னை, வடசென்னை – கொற்றலையாறு
  மத்திய சென்னை – கூவம்
  தென்சென்னை – அடையாறு

68. படிமம் என்பது எவ்வகையான உவமையை பயன்படுத்திக்கொள்கிறது?
A) காட்சி தருகிற உவமைகள்
B) காட்சி தரா வெறும் உவமைகள்
C) A மற்றும் B
D) மெய் உவமை
Explanation

- படிமம் என்பது உவமையினாலும் அமைவது. படிமம், காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது.

69.கூவம் ஆற்றினை ஆங்கிலேயர்கள் எவ்வாறு அழைத்தனர்?
A) மயிலாப்பூர் ஆறு
B) திருவல்லிக்கேணி ஆறு
C) கொற்றலையாறு
D) அடையாறு
Explanation

- மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் பிரான்சிஸ்டே ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெத்;தார். அன்று அப்பகுதியின் இருபுறமும் கூவம், அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கூவம் ஆற்றை, 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அதனை அழைத்தனர்

70.மொழிபெயர்ப்புக் கல்வி – பற்றிய சரியான கூற்று எது?
I. ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறு துறைகளில் உச்சங்கள் இருக்கும்.
II. மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும்.
III. நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு.
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, II, III அனைத்தும் சரி
D) III மட்டும் சரி
Explanation
I. ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறு துறைகளில் உச்சங்கள் இருக்கும்.
II. மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும்.
III. நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு.

71. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் ______.
A) மணவை முஸ்தபா
B) மு.கு. ஜகந்நாதர்
C) பரிதிமாற் கலைஞர்
D) உ.வே.சாமிநாதர்
Explanation
- "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

72. 'ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் ______.
A) மணவை முஸ்தபா
B) மு.கு. ஜகந்நாதர்
C) பரிதிமாற் கலைஞர்
D) உ.வே.சாமிநாதர்
Explanation
- 'ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்

73.தமிழ்நாடு ஆவணக்காப்பகம் கீழக்காணும் எந்த பாணியில் அமைக்கப்பட்டுள்ளது?

A) இந்திய-இஸ்லாமிய
B) இந்திய-பாரசீக
C) இந்திய-ஐரோப்பிய
D) இந்ததோ-சாரசனிக்
Explanation
➢ ஆவணங்களை முறையாகக் கையாளும் பழக்கம்கொண்ட ஆங்கிலேயர் உருவாக்கிய 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது. இது, இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படுகிறது. தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் பல இங்கே பாதுகாக்கப்படுகின்றன.

74.எட்டுத்தொகை நூல்களில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க (அகம் புறம் பற்றியதில்)
A) பதிற்றுப்பத்து
B) புறநானூறு
C) பரிபாடல்
D) குறுந்தொகை
Explanation
➢ அகமும் புறமும் – பரிபாடல்
புறம் – பதிற்றுப்பத்து, புறநானூறு
அகம் – நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை.

75. எங்கு கிடைத்த கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு என கூறலாம்?
A) பல்லாவரம்
B) மயிலாப்பூர்
C) கூடுவாஞ்சேரி
D) புழல்
Explanation
➢ பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம்

76.கூற்று: புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745 ல் தடைபட்டது.
காரணம்: இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் தடைபட்டது.
A) கூற்று காரணம் இரண்டும் சரி
B) கூற்று சரி காரணம் தவறு
C) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.
D) கூற்று காரணம் இரண்டும் தவறு
Explanation
➢ புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745 ல் தடைபட்டது.
இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் தடைபட்டது.

77.குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி அப்பகுதியின் மனித நாகரீகத்தின் பழமையை எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகிறது?
A) 2 இலட்சம்
B) 1 இலட்சம்
C) ஐம்பதாயிரம்
D) 10 இலட்சம்
Explanation
➢ இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுபுறப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு அருகேயுள்ள

குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி அப்பகுதியின் மனித நாகரீகத்தின் பழமையை 1 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகிறது.

78.கூற்றுகளை ஆராய்க
1. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகள்.
2. இவரின் பாடல்கள் இசைப்பாடல்களாகவே திகழ்கின்றன.
3. திருமுறைகளை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.
4. சமுதாயத்தின் பொருளாதார, கலை, பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம் சமயக் கோட்பாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.
A) 1, 2 சரி
B) 2, 4 சரி
C) 1, 2, 3 சரி
D) அனைத்தும் சரி
Explanation

1. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகள்.
2. இவரின் பாடல்கள் இசைப்பாடல்களாகவே திகழ்கின்றன.
3. திருமுறைகளை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

4. சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம் சமயக் கோட்பாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.

79.தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படும் நகரம் எது?
A) மதுரை
B) சென்னை
C) தூத்துக்குடி
D) மும்பை
Explanation

- நகரங்கள், சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும் நிகழ்கால வாழ்விற்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணைநிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் 'சென்னை' இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்.

80.கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறி
1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – பிரபஞ்சன்
3. வானம் வசப்படும் – புலவரேறு அரிமதி தென்னகன்
A) அனைத்தும் சரி
B) 1 மட்டும் சரி
C) 1, 2 சரி
D) 3 மட்டும் சரி
Explanation

- ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
  ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன், வானம் வசப்படும் – பிரபஞ்சன்

81.மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலரான யார் ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுந்தார்?

A) தாமஸ் மன்றோ
B) செயின்ட் ஜார்ஜ்
C) பிரான்சிஸ் டே
D) சர்தாமஸ் மன்றோ
Explanation

- மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் பிரான்சிஸ்டே ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுத்தார். அன்று அப்பகுதியின் இருபுறமும் கூவம், அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அதனை அழைத்தனர்.

82. கூற்றுகளை ஆராய்க
1. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.
2. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்து.
3. வெள்ளையர் நகரம், கருப்பர் நகரம் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது.
4. மதராசப்பட்டினம் என்ற இப்பகுதி விஜயநகர ஆட்சியின் உள்ளூர் ஆளுநர்களான சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639 ஆம் நாளில் பிரான்சிஸ் டே வாங்கினார்.
A) 1, 3 சரி
B) 1, 2 சரி
C) 1, 2, 3 சரி
D) அனைத்தும் சரி
Explanation

- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.
- கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்து.

83.கூவம் ஆற்றினை ஆங்கிலேயர்கள் எவ்வாறு அழைத்தனர்?
A) மயிலாப்பூர் ஆறு
B) திருவல்லிக்கேணி ஆறு
C) கொற்றலையாறு
D) அடையாறு
Explanation

- மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் பிரான்சிஸ்டே ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெத்;தார். அன்று அப்பகுதியின் இருபுறமும் கூவம், அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கூவம் ஆற்றை, 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அதனை அழைத்தனர்.

84. திருவல்லிக்கேணியில் கிடைக்கும் யாருடைய கல்வெட்டு அப்பகுதி பல்லவர் காலத்தில் சிறந்து விளங்கியதைக் காட்டுகிறது?
A) முதலாம் மகேந்திரவர்ம பல்லவன்
B) இரண்டாம் மகேந்திரவர்ம பல்லவன்
C) இராஜசிம்மன்
D) நந்திவர்மன்
Explanation

- பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம். திருவல்லிக்கேணியில்

கிடைக்கும் நந்திவர்மன் கல்வெட்டு அப்பகுதி பல்லவர் காலத்தில் சிறந்து விளங்கியதைக் காட்டுகிறது

85.மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை – என்ற வரியில் மடநல்லார் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) இளமை பொருந்திய பெண்கள்
B) இளமை பொருந்திய ஆண்கள்
C) சிறுவர்கள்
D) சிறுமியர்கள்

Explanation

- மடநல்லார் – இளமை பொருந்திய பெண்கள் என்று பொருள். இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர், திருமயிலை என்பது மேற்காணும் வரியின் பொருளாகும்.

86.ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும் – என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) திருஞானசம்பந்தர்
B) திருநாவுக்கரசர்
C) மாணிக்கவாசகர்
D) வள்ளலார்

Explanation

- ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும் – வள்ளலார.
ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடியை
நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் என்று வள்ளலார்
கந்தகோட்டத்துள் எழுந்தருளியிருக்கும் கந்தவேளை கேட்கிறார்.

87.இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டிமுடிக்கப்பட்ட முதல் கட்டடம் எது?

A) உயர்நீதி மன்ற வளாகம்
B) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
C) மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்
D) சேப்பாக்கம் அரண்மனை

Explanation

- இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை என்பது முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானிக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது. இப்பாணியில் 1768இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனையே ஆகும்.

88.கூற்றுகளை ஆராய்க.

1. வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டன.
2. தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்று அழைக்கப்பட்டன.
3. 1688இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது
4. 1646ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள்தொகை 19000 ஆகும்.

A) 1, 2 மட்டும் சரி
B) 3, 4 மட்டும் சரி
C) 1, 3 மட்டும் சரி
D) அனைத்தும் சரி

Explanation

- வடசென்னைப் பகுதிகள்; மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர். பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி, இன்று நம் சென்னையாக ஆகி இருக்கிறது. 1646ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 19000 ஆகும்.

இவ்வளர்ச்சியினை அறிந்தே 1688இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது.

89.பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, யாருடைய காலத்தில் அமைக்கப்பட்டது?
A) முதலாம் இராஜராஜன்
B) முதலாம் மகேந்திரவர்மன்
C) இராஜசிம்மன்
D) நந்திவர்மன்
Explanation
- பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம்

90.மாந்தோப்பு வசந்ததத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது – என்ற வரிகளை எழுதியவர் யார்?
A) பாரதிதாசன்
B) பாரதியார்
C) கவிமணி
D) ந.பிச்சமூர்த்தி
Explanation
- மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது – ந.பிச்சமூர்த்தி

91.கூற்றுகளை ஆராய்க
1. அகம்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை
2. புறம்: மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தாராற்றுப்படை
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு
Explanation
- அகம்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை புறம்: மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தாராற்றுப்படை

92.செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி________என அழைக்கப்பட்டது?
A) தமிழர் நகரம்
B) இந்தியர் நகரம்
C) வெள்ளையர் நகரம்
D) கருப்பர் நகரம்
Explanation
- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்டது.

93.அம்மூவனார் எந்த திணை பாடல்களை பாடுவதில் வல்லவர்?
A) நெய்தல்
B) முல்லை
C) மருதல்
D) பாலை

Explanation

- அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார். நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர்.

94.கூற்று: படிமம் என்பது காட்சிதரும் உவமைகளை மட்டுமே பயன்படுத்திக் கொள்கிறது.
காரணம்: படிமம் காட்சி தரும் உத்தி ஆகும்
A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று தவறு, காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

Explanation

- படிமம் என்பது உவமையினாலும் அமைவது. படிமம், காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது.

95. தோப்பில் முகமது மீரான் பற்றிய கூற்றுகளை ஆராய்க.
1. இவர் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணம் என்னும் சிற்றூரில் 1944இல் பிறந்தார்.
2. தமிழிலும், மலையாளத்திலும் நூல்களை படைப்பவர்
3. புதினம், சிறுகதை போன்ற பல்வேறு இலக்கியத் தளங்கில் இயங்கி வருபவர்
4. இவர் எழுதிய “சாய்வு நாற்காலி” எனும் புதினம் 1997இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது.
5. துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருது பெற்றுள்ளன.
A) 1, 2, 3 சரி
B) 4, 5 சரி
C) 1, 2, 5 சரி
D) அனைத்தும் சரி

Explanation

1. இவர் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காயப்பட்டணம் என்னும் சிற்றூரில் 1944இல் பிறந்தார்.
2. தமிழிலும், மலையாளத்திலும் நூல்களை படைப்பவர்

96.தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே – என்ற வரிகளை எழுதியவர் யார்?
A) திருஞானசம்பந்தர்
B) அருணகிரியார்
C) குணங்குடி மஸ்தான் சாகிபு
D) வள்ளலார்

Explanation

- தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
  தலமோங்கு கந்தவேளே
  தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
  சண்முகத் தெய்வமணியே – வள்ளலார்.

97.மதராசப்பட்டிணம் என்பது கீழ்க்காணும் எது இணைந்த பகுதி ஆகும்?
1. வெள்ளையர் நகரம்
2. கருப்பர் நகரம்
3. வண்ணாரப்பேட்டை
4. சிந்தாதிரிப்பேட்டை
A) 1, 3

B) 1, 2
C) 3, 4
D) 1, 2, 3, 4
Explanation

- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி ‘வெள்ளையர் நகரம்’ என்று அழைக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி ‘கருப்பர் நகரம்’ என அழைக்கப்பட்டது. இவ்விருப் பகுதிகளும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது

98. சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல் எது?
A) சோழர் தாயமுறை
B) சேரர் தாயமுறை
C) பாண்டிய தாயமுறை
D) பல்லவ தாயமுறை
Explanation

- சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல்கள்:
  1. தசரதன் குறையும் கைகேயி நிறையும்
  2. திருவள்ளுவர்
  3. சேரர் தாயமுறை
  4. தமிழும் தமிழரும்

99.கூற்றுகளை ஆராய்க.
1. வடசென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்று வழங்கப்பட்டன
2. தென்சென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டன
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு
Explanation

- வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைததனர். பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி, இன்று நம் சென்னையாக ஆகி இருக்கிறது

100.கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம்: சென்னையில் அமைந்துள்ள துறைமுகம்
A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று தவறு, காரணம் சரி
C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
Explanation

- கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்த காரணத்தால், இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். அவர்களால் வண்ணாரப்பேட்டை (வண்ணத்துக்காரன் பேட்டை), சிந்தாதரிப்பேட்டை (சின்னதறிப்பேட்டை) முதலான புதிய பகுதிகள் தோன்றின

101.ஒப்பந்தக் கூலி முறை குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – இந்த முறையின்படி கூலி சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும்

கூற்று 2 – பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காக திரிந்தாலோ, உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்தாலோ, ஒப்பந்த காலம் முடியும் முன் பணியை விட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறை தண்டனை வழங்கவோ முடியும்.
கூற்று 3 – இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்த தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான தண்டனைக்குரிய ஒப்பந்த முறை இது ஆகும்.
A) கூற்று 1, 2 மட்டும் சரி
B) கூற்று 2, 3 மட்டும் சரி
C) கூற்று 1, 3 மட்டும் சரி
D) எல்லா கூற்றுகளும் சரி
Explanation

- ஒரு அற்ப பிரச்சனைக்காக கூட சட்ட சரத்துக்களை காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையில் அடைக்கவும் செய்தனர். கூலி உயர்வுக்காகவும் அல்லது ஒப்பந்தத்தை முறிக்க செய்திட சங்கம் வைத்து போராட ஒப்பந்தக் கூலி சட்டம் தோட்ட தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை.இந்த முறையின்படி கூலி சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும்.பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காக திரிந்தாலோ, உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்தாலோ, ஒப்பந்த காலம் முடியும் முன் பணியை விட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறை தண்டனை வழங்கவோ முடியும்.இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்த தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான தண்டனைக்குரிய ஒப்பந்த முறை இது ஆகும்.

101.Which of the following statements about contract wage system is correct?
Statement 1 – According to this method the laborer has to work in a prison-like environment
Statement 2 – Negligence or refusal to work, truancy, disobeying orders, leaving work before the end of the contract period can result in denial of wages or imprisonment.
statement 3 – This is a punitive contract system that is completely different from the indentured labor scheme in practice today.
A) Only statement 1, 2 are correct
B) Only statement 2, 3 are correct
C) Only statement 1, 3 are correct
D) All the statements are correct
Explanation:

Plantation owners would refuse wages or imprison workers for even a trivial problem, citing legal constraints. The Contract Wages Act does not allow plantation workers to fight for a wage increase or break the contract with the press union.
Under this system the laborer has to work in a prison-like environment Negligence or refusal to perform work, truancy, disobedience to orders, or leaving work before the end of the contract period can result in denial of wages or imprisonment.
This is a punitive contract system that is in stark contrast to the contract labor scheme in practice today.

102.மகாராணி விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தின் கடைசி பத்து ஆண்டுகளில் மொத்த வருவாயான 647 மில்லியன் பவுண்டுகளில் 159 மில்லியன் பவுண்டுகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என கண்டறிந்து கூறியவர் யார்?
A) ஆர்.சி.தத்
B) தாதாபாய் நௌரோஜி

C) சுகுமார் சென்
D) சந்திரசேகர ராவ்
Explanation
- இந்தியாவில் நடந்த செல்வ வள கடத்தல் (Drain of Wealth) என்று இப்போக்கை வர்ணிக்கும் தாதாபாய் நவரோஜி இவ் வளங்கள் இந்தியாவிலேயே தங்கி இருந்தால் இந்த நாடு செழித்து இருக்கும். மேலும் அவர் கூறுகையில் கஜினி முகமதுவின் கொள்ளை 18 முறையோடு நின்றுவிட பிரிட்டிஷாரின் கொள்ளையோ முடிவில்லாமல் தொடர்கிறது என்றார்

102. Who found that in the last ten years of Queen Victoria's reign, out of a total revenue of £647 million, £159 million was sent to England?
A) RC Dutt
B) Dadabhai Naoroji
C) Sukumar Sen
D) Chandrasekhara Rao
**Explanation:**
- Dadabhai Navroji describes the current situation as a drain of wealth in India. If these resources stay in India, this country will be prosperous. He also said that while Ghazni Mohammad's looting stopped 18 times, British looting continued endlessly.

103.___ தமிழகத்தின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராகும்.
A) எள்
B) ஆமணக்கு
C) தென்னை
D) நிலக்கடலை
Explanation
- நிலக்கடலை, எள், ஆமணக்கு, தென்னை, சூரியகாந்தி மற்றும் கடுகு ஆகியன தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகும்

103._ is the major oilseed crop of Tamil Nadu.
A) Sesame
B) Castor
C) Coconut
D) Peanuts
Explanation:
- Groundnut, sesame, castor, coconut, sunflower and mustard are the major oilseeds grown in Tamil Nadu.

104.கூற்று 1: தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிர் நெல் ஆகும்.
கூற்று 2: பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய நெல் வகைகளாகும்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
Explanation
- தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிர் நெல் ஆகும். பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய நெல் வகைகளாகும்.

104. Statement 1: Paddy is the most important food crop of Tamilnadu.
Statement 2: Ponni and Kichadi Samba are the major rice varieties cultivated in Tamil Nadu.
A) Statement 1 is true and statement 2 is false

B) Statement 1 is false, statement 2 is true
C) Both statement 1 and statement 2 are correct
D) Both statement 1 and statement 2 are false
Explanation:
- Paddy is an important food crop of Tamil Nadu. Ponni and Khichadi Samba are the major rice varieties cultivated in Tamil Nadu.

105.மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?
A) மலபார்
B) கொரமண்டல்
C) கொங்கணம்
D) மத்தியப்பகுதி
Explanation
- மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி கொங்கணம் என்று அழைக்கப்பட்டது. செங்குத்தான மலைகளும், எளிதில் அணுகமுடியாத பள்ளத்தாக்குகளும், பாதுகாப்பு அரண்களாகத் திகழ்ந்த மலைகோட்டைகளும் இராணுவப் பாதுகாப்புக்கு உகந்தவையாக இருந்தன.

105. What was the narrow land where the Marathas lived called?
A) Malabar
B) Coromandel
C) Konkanam
D) Midsection
Explanation:
- The narrow land where the Marathas lived was called Konkanam. Steep hills, inaccessible valleys, and hill forts, which served as defensive bastions, were ideal for military defense.

106.ராட்க்ளிஃப் கோடு எந்த இரு நாடுகளுக்கு இடையே அமைந்துள்ளது?
A) இந்தியா – பாகிஸ்தான்
B) இந்தியா – ஆப்கானிஸ்தான்
C) இந்தியா – நேபாளம்
D) இந்தியா – சீனா
Explanation
- 1972 ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்தின்படி, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான எல்லை கோடு ராட்க்ளிஃப் கோடு என்று அழைக்கப்பட்டது. ராட்க்கிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தவர். இக் கோடு தற்போது கட்டுப்பாட்டு கோடு என்று அழைக்கப்படுகிறது

106. The Radcliffe Line is located between which two countries?
A) India – Pakistan
B) India – Afghanistan
C) India – Nepal
D) India – China
Explanation:
- According to the 1972 Shimla Agreement, the boundary line between India and Pakistan was called the Radcliffe Line. Radkiff was the Chairman of the Boundary Commission. This line is now known as the control line

107. இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுள் எது சரியானது?
I. சிம்லா ஒப்பந்தம்

II. லாகூர் பிரகடனம்
A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறானது
Explanation
- எல்லை தாண்டிய பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும். சிம்லா ஒப்பந்தம் மற்றும் லாகூர் பிரகடனம் ஆகியவற்றின் மூலம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவரும் இந்தியா முயன்றுள்ளது

107. Which of the following agreements between India and Pakistan is correct?
I. Treaty of Simla
II. Lahore Declaration
A) Only I is correct
B) Only II is correct
C) Both are correct
D) Both are incorrect
Explanation:
- Cross-border terrorism is the biggest threat. Through the Shimla Agreement and the Lahore Declaration, India sought to improve and bring about positive changes in the relationship between India and Pakistan

108. தமிழ் இனப் பிரச்சனை தொடர்பான கருத்து வேறுபாடு எந்த நாட்டுடன் இந்தியாவிற்கு ஏற்பட்டது?
A) இலங்கை
B) ஆப்கானிஸ்தான்
C) பாகிஸ்தான்
D) மாலத்தீவு
Explanation
- இந்திய நாடு பண்பாடு, கலாச்சார, வரலாறு மற்றும் சமய உறவுகளை இலங்கையுடன் கொண்டுள்ளது. தமிழ் இனப் பிரச்சனை தொடர்பான காலகட்டத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உறவில் சிறு பின்னடைவு ஏற்பட்டது

108. India had a disagreement with which country regarding the Tamil ethnic problem?
A) Sri Lanka
B) Afghanistan
C) Pakistan
D) Maldives
Explanation:
- India has cultural, historical and religious ties with Sri Lanka. There was a minor setback in the relationship between India and Sri Lanka during the Tamil ethnic conflict period

109.இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத்தில் பங்குதாரராக உள்ள நாடு எது?
A) இலங்கை
B) வங்கதேசம்
C) ஆப்கானிஸ்தான்
D) மியான்மர்

Explanation

- இந்தியா தகுதியுள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை ஆண்டுதோறும் அளித்து வருகிறது. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழக திட்டத்தில் இலங்கை ஒரு பங்குதாரர் ஆகும்

109.Which country is a partner of Nalanda University of India?

A) Sri Lanka

B) Bangladesh

C) Afghanistan

D) Myanmar

**Explanation:**

- India provides annual scholarships to deserving Sri Lankan students. Sri Lanka is a partner in India's Nalanda University programme

110.சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்ற மராத்தியர் முன்னதாக யாருடைய ஆட்சியின் கீழ் செயல்பட்டனர்?

A) பாமினி சுல்தான்

B) முகலாயர்

C) ராஜபுத்திரர்கள்

D) சாளுக்கியர்கள்

Explanation

- போர்ச் செயல்பாடுகளில் நீண்ட மரபைக் கொண்ட மராத்தியர் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளை தாக்கும் ஆற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்கள். முன்னதாக பாமினி சுல்தான்களின் கீழ் செயல்பட்ட மராத்தியர், சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்றனர். சிவாஜி மறைவுக்குப் பிறகு அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார், பெரார் ஆகிய சுல்தான்களின் கீழ் செயல்பட்டனர்

110.The Marathas who rose up during the Shivaji period were earlier functioning under whose rule?

A) Bamini Sultan

B) Mughals

C) Rajputs

D) Chalukyas

Explanation:

- With a long tradition in warfare, the Marathas excelled in loyalty, bravery, discipline, tact, and ability to attack the enemy. The Marathas, who had earlier functioned under the Bamini Sultans, rose during Shivaji's reign. After Shivaji's death he worked under the Sultans of Ahmednagar, Bijapur, Golconda, Bidar and Berar.

111.கூற்று: தமிழ்நாட்டில் வெப்பமண்டலப் பயிர்கள் மட்டுமே பயிரிடப்படுகின்றன.
காரணம்: தமிழ்நாடு பூமத்தியரேகைக்கு அருகிலும், வெப்ப மண்டலத்திலும் அமைந்துள்ளதால் வெப்ப மண்டலக் காலநிலையைப் பெறுகிறது.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

Explanation

- தமிழ்நாட்டில் வெப்பமண்டலப் பயிர்கள் மட்டுமே பயிரிடப்படுகின்றன.தமிழ்நாடு பூமத்தியரேகைக்கு அருகிலும், வெப்ப மண்டலத்திலும் அமைந்துள்ளதால் வெப்ப மண்டலக் காலநிலையைப் பெறுகிறது

111.Statement: Only tropical crops are cultivated in Tamil Nadu.

Reason: Tamil Nadu enjoys a tropical climate as it is located near the equator and in the tropics.

A) The statement is true and the reason is false

B) The statement is false and the reason is correct

C) The statement is correct and the reason explains the statement

D) The statement is correct and the reason does not explain the statement

Explanation:

- Only tropical crops are cultivated in Tamil Nadu.
- Tamil Nadu enjoys a tropical climate as it is located near the equator and in the tropics

112.இந்தியாவின் கிழக்கு கொள்கையின் மூன்று முக்கிய கூறுகள் ஆவன?

I. வலிமையான நிலப்பரப்பு இணைப்பு தொடர்பானவை

II. வணிகம் தொடர்பானவை

III. பாதுகாப்பு தொடர்பானவை

IV. பொருளாதார வளர்ச்சி தொடர்பானவை

A) I, II, III மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

Explanation

- இந்தியாவின் கிழக்கு கொள்கையின் மூன்று முக்கிய கூறுகள் வலிமையான நிலப்பரப்பு இணைப்பு, வணிகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானவை ஆகியன ஆகும்

112.What are the three main components of India's East Policy?

I. Those related to strong terrestrial connectivity

II. Business related

III. Security related

IV. related to economic development

A) Only I, II, III are correct

B) Only I, II, IV are correct

C) Only I, III, IV are correct

D) Only II, III, IV are correct

Explanation:

- The three main components of India's East Policy are strong land connectivity, trade and security

113.கீழ்காணும் கூற்றுகளில் சரியானது எது?

கூற்று 1 – ஐநா சபையின் பாதுகாப்பு சபையில் இந்தியா ஒரு நிரந்தர உறுப்பு நாடாக இருக்கிறது.

கூற்று 2 – ஜி-20 நாடுகள், கிழக்காசிய உச்சி மாநாடு, BRICS கூட்டமைப்பு போன்றவற்றில் இந்தியா உறுப்பினர் நாடாக உள்ளது.

கூற்று 3 – இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளை கொண்டுள்ளது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

Explanation

- ஆற்றல் வளம், முக்கிய வளங்களை பாதுகாத்தல், அவசியமான கப்பல் வழித்தடங்களை திறத்தல் மற்றும் பராமரித்தல், முதலீடுகளை எதிர்நோக்கல், கடல்கடந்த வணிக வாய்ப்புகள் மற்றும் வணிக நுழைவினைப்பெறுதல் போன்ற பல்வேறு காரணிகளால் இந்தியா முன்னேற்றம் கண்டு வருகிறது

113.Which of the following statements is correct?
Statement 1 – India is a permanent member of the UN Security Council.
Statement 2 – India is a member of G-20 countries, East Asia Summit, BRICS.
Statement 3 – India has diplomatic relations with most of the countries of the world.
A) Only statement 1, 2 are correct
B) Only statement 2, 3 are correct
C) Only statement 1, 3 are correct
D) All the statements are correct
Explanation:
C) III, IV only
D) I, III only

Explanation:

- Most of the substances we use in our daily life are compounds. Parts of some objects can be seen with our naked eyes. But the various constituents of most compounds are invisible to our naked eyes. Compounds are of two types: unimodal and multimodal. True solutions and mixtures are homogeneous. Hangings and grouts are multi-layered

156.மலரின் பல மகரந்தத் தாள்களின் தொகுப்பானது_____
A) மகரந்ததாள் வட்டம்
B) சூலக வட்டம்
C) மகரந்தத் தாள்

D) சூல் முடி

Explanation

- மகரந்தத்தாள் வட்டமானது மலரின் ஆண் இனப்பெருக்கப் பகுதியாகும். இது பல மகரந்தத் தாள்களின் தொகுப்பு ஆகும். ஒவ்வொரு மகரந்தத் தாளும் ஒரு காம்பு போன்ற பகுதியையும் பை போன்ற பகுதியையும் கொண்டிருக்கும். காம்புப் பகுதி மகரந்தக்கம்பி எனவும் அதன் நுனியில் அமைந்த பை போன்ற பகுதி மகரந்தப்பை எனவும் அழைக்கப்படுகின்றன. மகரந்தத்தூள் மகரந்தப் பையின் உள்ளே காணப்படுகிறது.

156. The bundle of many stamens of a flower is ___

A) pollen circle

B) gynoecium

C) Pollen

D) stigma

Explanation:

- The anther is the male reproductive part of the flower. It is a bundle of many stamens. Each stamen consists of a stalk-like part and a sac-like part. The pistil part is called anther and the bag-like part at its tip is called anther. Pollen is found inside the anther.

157..எந்த நாட்டுடன் கோழிப் பொருட்களின் இறக்குமதி தொடர்பான சர்ச்சைகளை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா முடிவு செய்தது?

A) இலங்கை

B) அமெரிக்கா

C) இஸ்ரேல்

D) பங்களாதேஷ்

Explanation

- இந்தியாவும் அமெரிக்காவும் கோழிப் பொருட்களின் இறக்குமதி தொடர்பான சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வரவும், ஆப்பிள், அயிண்ட்ஸ், கொண்டைக்கடலை மற்றும் பருப்பு மீதான இறக்குமதி வரியை குறைக்கவும் முடிவு செய்தன. கையொப்பமிடப்பட்டுள்ள புதிய ஒப்பந்தங்கள், கோழிப்பண்ணை துறையில் உள்ள விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சங்கங்கள் அஞ்சுகின்றனர்

157.India decided to end disputes with which country regarding import of poultry products?

A) Sri Lanka

B) America

C) Israel

D) Bangladesh

Explanation:

- India and the US have agreed to end their dispute over imports of poultry products and reduce import duties on apples, almonds, chickpeas and pulses. Farmers and traders associations fear that the new agreements signed will harm the interests of farmers and small and medium enterprises in the poultry sector.

158. கூற்று 1 :ஆதித்யா-எல்1 என்பது பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கிமீ தொலைவில் அமைந்துள்ள முதல் சூரியன்-பூமி லாக்ராஞ்சியன் புள்ளியை (எல்1) சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் இருந்து சூரியனை ஆய்வு செய்யும் முதல் இந்திய விண்வெளி அடிப்படையிலான ஆய்வகம் ஆகும்.

கூற்று 2 :செப்டம்பர் 3, 5 மற்றும் 10 ஆகிய தேதிகளில் முறையே முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பூமியை இணைக்கும் சூழ்ச்சி வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.

கூற்று 3:விண்கலம் பூமியைச் சுற்றி 16 நாள் பயணத்தின் போது சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன, இதன் போது விண்கலம் L1 க்கு அதன் மேலும் பயணத்திற்கு தேவையான வேகத்தைப் பெறும்

A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 3 மட்டும் சரி
D) அனைத்தும் சரி

Explanation

- ஆதித்யா-எல்1 என்பது பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கிமீ தொலைவில் அமைந்துள்ள முதல் சூரியன்-பூமி லாக்ராஞ்சியன் புள்ளியை (எல்1) சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் இருந்து சூரியனை ஆய்வு செய்யும் முதல் இந்திய விண்வெளி அடிப்படையிலான ஆய்வகம் ஆகும். செப்டம்பர் 3, 5 மற்றும் 10 ஆகிய தேதிகளில் முறையே முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பூமியை இணைக்கும் சூழ்ச்சி வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது. விண்கலம் பூமியைச் சுற்றி 16 நாள் பயணத்தின் போது சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன, இதன் போது விண்கலம் L1 க்கு அதன் மேலும் பயணத்திற்கு தேவையான வேகத்தைப் பெறும்

158. Assertion 1 : Aditya-L1 is the first Indian space-based observatory to study the Sun from a halo orbit around the first Sun-Earth Lagrangian point (L1) located about 1.5 million km from Earth.

Assertion 2 : The first, second and third Earth docking maneuvers were successfully performed on 3rd, 5th and 10th September respectively.

Assertion 3: Maneuvers are performed during the 16-day orbit of the spacecraft during which the spacecraft acquires the speed required for its further journey to L1.

A) Only statement 1 is correct
B) Only statement 2 is correct
C) Only statement 3 is correct
D) All are correct

Explanation:

- Aditya-L1 is the first Indian space-based observatory to study the Sun from a halo orbit around the first Sun-Earth Lagrangian point (L1), located about 1.5 million km from Earth. The first, second and third Earth docking maneuvers were successfully performed on September 3, 5 and 10 respectively. Maneuvers are performed during the spacecraft's 16-day orbit around Earth, during which the spacecraft will gain the required speed for its further journey to L1.

159. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இந்தியாவில், புராதன காலத்து மரபு சார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படிநிலை, மேல் – கீழ் என்னும் பாகுபாட்டை கொண்டிருக்கிறது.

(ii) வருண படிநிலை அமைப்பு ‘சதுர் வருண அமைப்பு’ (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது.

A) (i) மற்றும் (ii) சரி
B) (i) மற்றும் (ii) தவறு
C) (i) சரி (ii) தவறு
D) (i) தவறு (ii) சரி

Explanation

- சமூகப்படிநிலைகளின் பின்புலம்: இந்தியாவில், புராதன காலத்து மரபு சார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படிநிலை, மேல் – கீழ் என்னும் பாகுபாட்டை கொண்டிருக்கிறது. வருண படிநிலை அமைப்பு

'சதுர் வருண அமைப்பு' (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது

159. Choose the correct answer from the following statements

(i) In India, the Varunasirama dharma developed from the traditional thinking of ancient times has a social hierarchy, with the distinction between upper and lower.

(ii) Varuna Hierarchy system is known as 'Chatur Varuna System' (Four Varuna System – Antanara, Chatriya, Vaisya, Shudra).

A) (i) and (ii) are correct
B) (i) and (ii) are false
C) (i) True (ii) False
D) (i) False (ii) True

Explanation:

- Background of social hierarchies: In India, the Varunashirama dharma social hierarchies developed from the traditional thinking of ancient times, has a distinction between upper and lower. The Varuna Hierarchy is called 'Satur Varuna System' (Four Varuna System – Antanara, Chatriya, Vaisya, Shudra)

பின்வருவனவற்றுள் சரியான விடையத் தேர்ந்தெடு.

160.அண்டம் என்பது கீழ்க்கண்டவற்றுள் எவற்றை உள்ளடக்கியது?

I. விண்மீன் திரள்கள்
II. புவி
III. கோள்கள்
IV. வான்வெளி

A) I, II, III மட்டும்
B) II, III, IV மட்டும்
C) I, III, IV மட்டும்
D) இவை அனைத்தும்

Explanation

- கோடிக்கணக்கான விண்மீன்களை உள்ளடக்கிய ஒளி வீசக்கூடிய விண்மீன் திரள்களே அண்டத்தின் அடிப்படைக் கூறுகள் ஆகும். புவி, கோள்கள், விண்மீன்கள், வான்வெளி மற்றும் விண்மீன் திரள்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய அமைப்பு அண்டம் ஆகும்.

Choose the correct answer from the following.

160. Universe includes which of the following?

I. Galaxies
II. Earth
III. Planets
IV. air space

A) I, II, III only
B) II, III, IV only
C) I, III, IV only
D) All of these

Explanation:

- The fundamental building blocks of the universe are the luminous galaxies, which contain billions of stars. The universe is the system that includes the Earth, planets, stars, space and galaxies.

161. i ) அண்மைக் காலங்களில் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலமாகவே கிராமப்புற வறுமையை ஒழிக்கமுடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ii ) நம் நாட்டில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் செயல்படும் மிகப்பெரிய திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

Explanation

- அண்மைக் காலங்களில் விவசாயம் அல்லாத வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலமாகவே கிராமப்புற வறுமையை ஒழிக்கமுடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகப் பல திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அவைகளில் பல வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் இன்றையஅளவில் இத்துறையில் செயல்படும் மிகப்பெரிய திட்டம் இதுவேயாகும்.

161. i ) In recent times it has been widely accepted that rural poverty can be eradicated by increasing agricultural employment.

ii ) The Mahatma Gandhi National Rural Employment Guarantee Act is the largest scheme of employment guarantee scheme in our country.

A) i ) only

B) ii ) only

C) i ) and ii )

D) Both are wrong

Explanation:

- In recent times it has been widely accepted that rural poverty can be eradicated by increasing non-agricultural employment. In the last several years many schemes have been introduced to create new employment opportunities. Many of them are linked to employment assurance schemes. This is the biggest project in this sector in our country today.

162.கூற்று: தீபகற்ப இந்தியாவில் குளிர்க்காலம் குளிரற்று காணப்பட்டு வருடம் முழுவதும் சீரான வெப்பநிலையைக் கொண்டுள்ளது.

காரணம்: இப்பகுதி முழுவதும் நிலவும் காலநிலை கடல்சார் ஆதிக்கத்தை கொண்டுள்ளது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் சரியான விளக்கமல்ல

Explanation

- தீபகற்ப இந்தியாவில் குளிர்க்காலம் குளிரற்று காணப்பட்டு வருடம் முழுவதும் சீரான வெப்பநிலையைக் கொண்டுள்ளது. இப்பகுதி முழுவதும் நிலவும் காலநிலை கடல்சார் ஆதிக்கத்தை கொண்டுள்ளது.கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, வெப்பம் மற்றும் அழுத்த வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம் மழைப்பொழிவையும் பாதிக்கின்றது.

162. Assertion: Peninsular India has mild winters and a uniform temperature throughout the year.

Reason: The prevailing climate throughout the region is maritime dominated.

A) The statement is true, the reason is false

B) The statement is false, the reason is correct

C) The statement is both correct and correct explanation

D) Statement Reason is both correct, but neither explanation is correct

Explanation:

- Peninsular India has mild winters and a consistent temperature throughout the year.
- The prevailing climate throughout the region is maritime dominated.
- Distance from the ocean also affects precipitation by creating heat and pressure differences.

163.கூற்று 1: கடல்களின் ஆதிக்கமின்மை காரணமாக மத்திய மற்றும் வட இந்திய பகுதிகள் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகளைக் கொண்டுள்ளன.
கூற்று 2: வட இந்தியப் பகுதிகளில் கோடையில் கடும் வெப்பமும் மற்றும் குளிர் காலத்தில் கடும் குளிரும் நிலவுகிறது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
Explanation
- கடல்களின் ஆதிக்கமின்மை காரணமாக மத்திய மற்றும் வட இந்திய பகுதிகள் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகளைக் கொண்டுள்ளன. வட இந்தியப் பகுதிகளில் கோடையில் கடும் வெப்பமும் மற்றும் குளிர் காலத்தில் கடும் குளிரும் நிலவுகிறது

163.Statement 1: Central and North Indian regions have seasonal variations in temperature due to non-dominance of oceans.
Statement 2: North Indian regions experience extreme heat in summer and extreme cold in winter.
A) Statement 1 is true and statement 2 is false
B) Statement 1 is false, statement 2 is true
C) Both statement 1 and statement 2 are correct
D) Both statement 1 and statement 2 are false
Explanation:
- Central and North Indian regions have seasonal variations in temperature due to non-dominance of oceans.
- North Indian regions experience extreme heat in summer and extreme cold in winter

164.இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க 'மொபைல் வேன் திட்டத்தை' அறிமுகப்படுத்திய மாநிலம் எது?
A) அசாம்
B) இமாச்சல பிரதேசம்
C) அருணாச்சல பிரதேசம்
D) ராஜஸ்தான்
Explanation
- இமாச்சலப் பிரதேச விவசாயத் துறை, 'பிரகிருதிக் கெதி குஷால் கிசான் யோஜனா' திட்டத்தின் ஒரு பகுதியாக, 'மொபைல் வேன் திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. சுற்றுச்சூழல் நட்பு மற்றும் இயற்கை விவசாய முறைகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. கரிம மற்றும் இரசாயனமற்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில், புதிய, கரிமப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக வழங்குவதில் இந்த முயற்சி கவனம் செலுத்துகிறது.

164.Which state has introduced 'Mobile Van Scheme' to promote organic farming?
A) Assam
B) Himachal Pradesh
C) Arunachal Pradesh
D) Rajasthan

Explanation:

- Himachal Pradesh Agriculture Department has introduced 'Mobile Van Scheme' as a part of 'Prakrithik Gethi Kushal Kisan Yojana'. It aims to promote eco-friendly and organic farming practices. The initiative focuses on providing fresh, organic produce directly to consumers, while promoting organic and chemical-free farming.

165.கூற்று 1 :உக்ரைனில் போரின் காரணமாக ரஷ்யாவிற்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடைகளுக்கு ஏற்ப, போலந்து அனைத்து ரஷ்ய பதிவு செய்யப்பட்ட பயணிகள் கார்களும் நாட்டிற்குள் நுழைவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தடையை அமல்படுத்தத் தொடங்கியுள்ளது. லிதுவேனியா, லாட்வியா மற்றும் எஸ்டோனியா ஆகியவை ரஷ்ய உரிமத் தகடுகளைக் கொண்ட வாகனங்களுக்கு இதேபோன்ற தடையை அமல்படுத்திய சிறிது நேரத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கூற்று 2 :உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு அதன் அச்சுறுத்தல் குறித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டை இந்த முடிவு பிரதிபலிக்கிறது.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) கூற்று 1 மற்றும் 2 தவறு
D) அனைத்தும் சரி

Explanation

- உக்ரைனில் போரின் காரணமாக ரஷ்யாவிற்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடைகளுக்கு ஏற்ப, போலந்து அனைத்து ரஷ்ய பதிவு செய்யப்பட்ட பயணிகள் கார்களும் நாட்டிற்குள் நுழைவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தடையை அமல்படுத்தத் தொடங்கியுள்ளது. லிதுவேனியா, லாட்வியா மற்றும் எஸ்டோனியா ஆகியவை ரஷ்ய உரிமத் தகடுகளைக் கொண்ட வாகனங்களுக்கு இதேபோன்ற தடையை அமல்படுத்திய சிறிது நேரத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு அதன் அச்சுறுத்தல் குறித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டை இந்த முடிவு பிரதிபலிக்கிறது.

165. Statement 1 : In line with EU sanctions against Russia due to the war in Ukraine, Poland has begun enforcing the European Union's (EU) ban on all Russian-registered passenger cars entering the country. The move comes shortly after Lithuania, Latvia and Estonia implemented similar bans on vehicles with Russian license plates.
Statement 2 : The decision reflects the EU's position on Russia's actions in Ukraine and its threat to international security.
A) Only statement 1 is correct
B) Only statement 2 is correct
C) Statement 1 and 2 are false
D) All are correct

Explanation:

- Poland has begun enforcing the European Union's (EU) ban on all Russian-registered passenger cars entering the country, in line with EU sanctions against Russia over its war in Ukraine. The move comes shortly after Lithuania, Latvia and Estonia implemented similar bans on vehicles with Russian license plates. The decision reflects the EU's position on Russia's actions in Ukraine and its threat to international security.

166.'கிரஹா ஆதார்' மற்றும் 'சவாத் இ பஜார்' முயற்சிகளை எந்த மாநிலம் தொடங்கியது?

A) கேரளா
B) குஜராத்
C) கோவா
D) ஒடிசா

Explanation

- கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் க்ரிஹா ஆதார் அனுமதி உத்தரவுகளை விநியோகித்தார், இது வீட்டு வேலை செய்பவர்களுக்கு நிதி உதவி மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சுயம்புரா கோவா திட்டத்தின் கீழ் கோவா தொழில்முனைவோர் மற்றும் சுய உதவி குழுக்களை மேம்படுத்தும் டிஜிட்டல் முயற்சியான "தி சாவத் இ பஜார்" ஐ அவர் தொடங்கினார். ஸ்வயம்பூர்ணா கோவா 2.0-ன் கீழ் பெண்களுக்கு உணவுப் பொருட்களை பேக்கேஜிங் மற்றும் விற்பனை செய்வதில் இலவசப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

166.Which state started the 'Graha Aadhaar' and 'Sawad e Bazar' initiatives?

A) Kerala
B) Gujarat
C) Goa
D) Odisha

Explanation:

- Goa Chief Minister Pramod Sawant distributed Griha Aadhaar sanction orders aimed at providing financial assistance to domestic workers and improving their standard of living. He launched "The Savat e Bazaar", a digital initiative to empower Goan entrepreneurs and self-help groups under the Suyambura Goa project. Under Swayambhunra Goa 2.0, the government plans to provide free training to women in food packaging and marketing.

167.கீழ்க்கண்டவற்றுள் மண்ணரிப்பிற்கான காரணங்களுல் பொருந்தாதது எது.

A) அதி வேகமாக வீசும் காற்று
B) பெரு வெள்ளம்
C) நிலச்சரிவு
D) மரம் வளர்த்தல்

Explanation

- அதி வேகமாக வீசும் காற்று, பெரு வெள்ளம், நிலச்சரிவு, மனிதரின் நடவடிக்கைகள் (வேளாண்மை, காடழிப்பு, சுரங்கங்கள் ஏற்படுத்துதல்) மற்றும் கால்நடைகளின் அதிக மேய்ச்சல் ஆகியவை மண்ணரிப்பிற்கான முக்கிய காரணிகளாகும்

167.Which of the following is not true of the causes of soil erosion?

A) High velocity wind
B) Great Flood
C) Landslide
D) Tree growing

Explanation:

- High winds, heavy floods, landslides, human activities (agriculture, deforestation, mining) and overgrazing by livestock are the main causes of soil erosion.

168.பொருத்துக: (மலரின் பாகங்கள்)

A) மகரந்தத்தாள் வட்டம் – 1. இன்டைன்
B) சூலக வட்டம் – 2. எக்ஸைன்

C) கடினமான வெளியுறை(மகரந்தத்தூள்) – 3. ஆண் இனப்பெருக்க பகுதி
D) மெள்ளிய உள்ளுறை(மகரந்தத்தூள்) – 4. பெண் இனப்பெருக்க பகுதி
A) 1 2 3 4
B) 2 1 3 4
C) 3 4 2 1
D) 3 1 2 4
Explanation
A) மகரந்தத்தாள் வட்டம் – 1. ஆண் இனப்பெருக்க பகுதி
B) சூலக வட்டம் – 2. பெண் இனப்பெருக்க பகுதி
C) கடினமான வெளியுறை(மகரந்தத்தூள்) – 3. எக்ஸைன்
D) மெள்ளிய உள்ளுறை(மகரந்தத்தூள்) – 4. இன்டைன்

168. Match: (parts of flower)
A) Pollen circle – 1. Intine
B) gynocieum – 2. Exine
C) Hard coat (pollen) – 3. Male reproductive region
D) Anthers – 4. Female reproductive tract
A) 1 2 3 4
B) 2 1 3 4
C) 3 4 2 1
D) 3 1 2 4
Explanation:
- Pollen circle – 1. Male reproductive area
- gynocieum – 2. Female reproductive area
- Hard coat (pollen) – 3. Exine
- Integument (pollen) – 4. Intine

169. பார்க்கக்கூடிய அண்டம் எவ்வளவு ஒளியாண்டுகள் அளவு கொண்டது?
A) 90 பில்லியன் ஒளி ஆண்டுகள்
B) 93 பில்லியன் ஒளி ஆண்டுகள்
C) 96 பில்லியன் ஒளி ஆண்டுகள்
D) 99 பில்லியன் ஒளி ஆண்டுகள்
Explanation
- பருப்பொருள்கள், ஆற்றல் மற்றும் காலம் உள்ளிட்ட அனைத்தும் அண்டத்தில் அடங்கும். அண்டம் எவ்வளவு பெரியது என்று எவருக்கும் தெரியாது. எல்லையற்றதாக இருக்கலாம். தங்களால் பார்க்க முடிந்ததை வைத்து அண்டத்தின் அளவை அறிவியலாளர்கள் கணிக்கின்றனர். இதற்கு பார்க்கக்கூடிய அண்டம் என்று பெயர். இந்த பார்க்கக்கூடிய அண்டம் 93 பில்லியன் ஒளி ஆண்டுகள் அளவு கொண்டது

169. How many light years is the visible universe?
A) 90 billion light years
B) 93 billion light years
C) 96 billion light years
D) 99 billion light years
Explanation:
- The universe includes everything including matter, energy and time. No one knows how big the universe is. can be infinite. Scientists estimate the size of the universe based on what they can see. This is called visible universe. The visible universe is 93 billion light years across

170.மரப்பொருள் தூய்மையாக்க பயன்படும் அமிலம் ?
A) சிட்ரிக் அமிலம்
B) கார்பானிக் அமிலம்

C) டார்டாரிக் அமிலம்
D) ஆக்சாலிக் அமிலம்
Explanation
- ஆக்சாலிக் அமிலம் மரபொருள்களை தூய்மையாக்கவும் மற்றும் கருப்பு கறைகளை நீக்கவும் பயன்படுகிறது

170. What acid is used to clean wood?
A) Citric acid
B) Carbonic acid
C) Tartaric acid
D) Oxalic acid
Explanation:
- Oxalic acid is used to disinfect wood and remove black stains

171.கூற்று (i): இனப்பெருக்கம் நிகழும் காலமானது உயிரினத்திற்கு உயிரினம் மாறுபடுகிறது.
கூற்று (ii): பாலிலா இனப்பெருக்கத்தின் மூலம் ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் இணைந்து புதிய உயிரினம் தோன்றுகிறது.
A) கூற்று i சரி, கூற்று ii தவறு
B) கூற்று i தவறு, கூற்று ii சரி
C) கூற்று i, ii இரண்டும் சரி
D) கூற்று i, ii இரண்டும் தவறு
Explanation
- இனப்பெருக்கம் நிகழும் காலமானது உயிரினத்திற்கு உயிரினம் மாறுபடுகிறது. ஈஸ்ட், பாக்டீரியா, எலி, பசு, யானை மற்றும் மனிதரில் இனப்பெருக்க காலத்தில் இம்மாறுபாட்டைக் காணலாம். பால் இனப்பெருக்கத்தின் மூலம் ஆண் மற்றும் பெண் இனச்செல்கள்(விந்து மற்றும் அண்டம்) இணைந்து புதிய உயிரினம் தோன்றுகிறது

171. Assertion (i): The period during which reproduction takes place varies from species to species.
Assertion (ii): Male and female gametes combine to form a new organism through polyploid reproduction.
A) Statement i is true and statement ii is false
B) Statement i is false, statement ii is correct
C) Both statement i and ii are correct
D) Both statement i and ii are false
Explanation:
- The timing of reproduction varies from species to species. This variation can be observed during reproduction in yeast, bacteria, mice, cows, elephants and humans. Male and female reproductive cells (sperm and ovum) combine to form a new organism through milk reproduction

172.கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. அலுமினிய அணுக்களில் இருந்து வேதியியல் ரீதியாக எளிமையான பொருட்களை பெற முடியாது.
II. அலுமினிய அணுக்களில் இருந்து அலுமினியம் ஆக்சைடு, அலுமினியம் நைட்ரேட் மற்றும் அலுமினியம் சல்பேட் போன்ற சிக்கலான வேதிப் பொருட்களை உருவாக்க முடியும்.
A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு
Explanation

- அலுமினியம் என்னும் தனிமம், அலுமினியம் அணுக்களால் ஆனது. அலுமினிய அணுக்களில் இருந்து வேதியியல் ரீதியாக எளிமையான பொருட்களை பெற முடியாது. ஆனால், அலுமினிய அணுக்களில் இருந்து அலுமினியம் ஆக்சைடு, அலுமினியம் நைட்ரேட் மற்றும் அலுமினியம் சல்பேட் போன்ற சிக்கலான வேதிப் பொருட்களை உருவாக்க முடியும். இதனை கண்டறிந்து கூறியவர் ராபர்ட் பாயில் என்பவர் ஆவார்.

172.Which of the following statements is correct?
I. Chemically simple substances cannot be derived from aluminum atoms.
II. Complex chemicals such as aluminum oxide, aluminum nitrate, and aluminum sulfate can be formed from aluminum atoms.
A) Only I is correct
B) Only II is correct
C) Both are correct
D) Both are wrong
Explanation:

- Aluminum is an element made up of aluminum atoms. Chemically simple substances cannot be obtained from aluminum atoms. However, aluminum atoms can form complex chemicals such as aluminum oxide, aluminum nitrate, and aluminum sulfate. Robert Boyle was the person who discovered this.

173. கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. ஒரு தனிமம் அல்லது ஒரு சேர்மத்தின் மிகச்சிறிய துகள் மூலக்கூறு ஆகும்.
II. மூலக்கூறு என்பது தனித்து காணப்படும்.
A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு
Explanation

- வேதி வினையில் ஈடுபடும் ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள் அணு ஆகும். அணு தனித்தோ அல்லது சேர்ந்தோ காணப்படும். ஒரு தனிமம் அல்லது ஒரு சேர்மத்தின் மிகச்சிறிய துகள் மூலக்கூறு ஆகும். இது தனித்து காணப்படும். மேலும் மூலக்கூறு, பொருட்களின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது

173. Which of the following statements is correct?
I. A molecule is the smallest particle of an element or a compound.
II. Molecules are isolated.
A) Only I is correct
B) Only II is correct
C) Both are correct
D) Both are wrong
Explanation:

- An atom is the smallest particle of an element involved in a chemical reaction. Atoms can be found singly or together. A molecule is the smallest particle of an element or a compound. It stands out. And the molecule itself possesses the physical and chemical properties of matter

174.இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் எது?
A) ஆரியப்பட்டா
B) ரோகிணி
C) பாஸ்கரா
D) ஆப்பிள்

Explanation

- இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஆரியபட்டா என்பதாகும். 1975 ஆம் ஆண்டு, ஏப்ரல் 19 ஆவது நாள் விண்ணில் ஏவப்பட்டது. பொதுவாக செயற்கைக்கோள்கள் சில நூறு கிலோ மீட்டர் உயரத்தில் பூமியைச் சுற்றி வரும் வகையில் விண்ணில் செலுத்தப்படுகின்றன

174. Which was India's first satellite?

A) Aryapatta
B) Rohini
C) Bhaskara
D) Apple

Explanation:

- India's first satellite was Aryabhata. It was launched on April 19, 1975. Satellites are usually launched in orbit around the Earth at an altitude of a few hundred kilometers

175.ஹார்மோன் என்னும் சொல் கீழ்க்கண்ட எம்மொழிச்சொல்லிளிருந்து உருவானது.

A) இலத்தின்
B) ஸ்பானிஷ்
C) கிரேக்கம்
D) பிரெஞ்சு

Explanation

- ‘கிளர்ச்சி’ என்ற பொருள்படும் ‘ஹார்மன்’ என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து ‘ஹார்மோன்’ என்னும் சொல் உருவாகியது.

175. The word hormone is derived from the following word.

A) Latin
B) Spanish
C) Greek
D) French

Explanation:

- The word 'hormone' is derived from the Greek word 'hormon' which means 'rebellion'.

176. 31, 29, 24, 22, 17, ... இந்தத் தொடரில் அடுத்த எண் என்பதைக் காண்க.

A) 12
B) 13
C)14
D) 15

Explanation

- இதில் மாற்றுக் கழித்தல் தொடர் அடங்கியுள்ளது. அதன் படி, இந்தத் தொடரில் முதலில் 2 ஆல் கழிக்கப்பட்டு அடுத்து 5-ஆல் கழிக்கப்பட்டுள்ளது.

176. Find that 31, 29, 24, 22, 17, ... is the next number in the series.

A) 12
B) 13
C) 14
D) 15

Explanation:

- This includes alternating subtraction series. Accordingly, the series is first subtracted by 2 and then subtracted by 5.

177. நாற்கர ABCD இல், ∠C = 72° மற்றும் ∠D = 80°. ∠A மற்றும் ∠B இன் இருபிரிவுகள் O புள்ளியில் சந்திக்கின்றன. ∠AOB இன் அளவு என்ன?

A) 70°

B) 74°
C) 76°
D) 78°

Explanation

$\angle A + \angle B + \angle C + \angle D = 360°$
$\Rightarrow \angle A + \angle B + 72° + 80° = 360°$
$\Rightarrow \angle A + \angle B = 360° - 152° = 208°$
$\Delta AOB$ இல்
$\angle A/2 + \angle B/2 + \angle AOB = 180°$
$\Rightarrow \angle A/2 + \angle B/2 + <AOB = 76$

177. In quadrilateral ABCD, ∠C = 72° and ∠D = 80°. The bisectors of ∠A and ∠B meet at point O. What is the measure of ∠AOB?
A) 70°
B) 74°
C) 76°
D) 78°

Explanation:

$\angle A + \angle B + \angle C + \angle D = 360°$
$\Rightarrow \angle A + \angle B + 72° + 80° = 360°$
$\Rightarrow \angle A + \angle B = 360° - 152° = 208°$
At $\Delta AOB$
$\angle A/2 + \angle B/2 + \angle AOB = 180°$
$\Rightarrow \angle A/2 + \angle B/2 + <AOB = 76$

178. 201, 202, 204, 207, ... இந்தத் தொடரில் வரும் அடுத்த எண்
A) 208
B) 205
C) 211
D) 210

Explanation

- இந்தக் கூட்டத்தொடரில் முதல் எண்ணுடன் 1, இரண்டாம் எண்ணுடன் இரண்டு, மூன்றாம் எண்ணுடன் 3 என தொடர்ந்து சேர்க்கப்பட்டு வருகிறது.

178. 201, 202, 204, 207, ... this The next number in the series
A) 208
B) 205
C) 211
D) 210

Explanation:

- In this sequence 1 is added to the first number, 2 to the second number and 3 to the third number.

179.முழுக்களில் * என்ற ஈருறுப்புச் செயலி a * b = a + b - 1 என வரையறுக்கப்படுகிறது எனில் சமனி உறுப்பு
A) 0
B) 1
C) a
D) b

Explanation

- ஒரு பைனரி செயல்பாடு கொண்ட தொகுப்பில் உள்ள அடையாள உறுப்பு, செயல்பாட்டின் கீழ் உள்ள தொகுப்பில் உள்ள வேறு எந்த உறுப்புடன் இணைந்தால், மற்ற உறுப்பு மாறாமல் இருக்கும்.

இந்த நிலையில், செயல்பாடு * a * b = a + b - 1 ஆல் வரையறுக்கப்படுகிறது. எந்த முழு எண்ணுக்கும் a * e = a மற்றும் e * a = a என்ற உறுப்பைக் கண்டறிய வேண்டும்.
இந்த சமன்பாடுகளை அமைத்தல் மூலம் பெறுவது:
1) a * e = a + e - 1 = a
2) e * a = e + a - 1 = a
சமன்பாடு 1 இலிருந்து), e - 1 = 0 ஐப் பெறுவதற்கு நாம் எளிதாக்கலாம், எனவே e = 1.
இதை சமன்பாடு 2 இல் சரிபார்த்தால், நாம் 1 + a - 1 = a ஐப் பெறுகிறோம், இது அனைத்து முழு எண்களுக்கும் பொருந்தும் a.
எனவே, இந்த செயல்பாட்டின் கீழ் அடையாள உறுப்பு 1 ஆகும், இது விருப்பம் 2 க்கு ஒத்திருக்கிறது

179. A binomial function * on integers is defined as a * b = a + b - 1 if the equation

A) 0
B) 1
C) a
D) b

Explanation:

- If an identity element in a set with a binary function is combined with any other element in the set under the function, the other element remains unchanged.
  In this case, the function is defined by * a * b = a + b - 1. For any integer a * e = a and find the element such that e * a = a.
  By setting these equations we get:
  1)a * e = a + e - 1 = a
  2) e * a = e + a - 1 = a
  From Equation 1), we can simplify to get e - 1 = 0, so e = 1.
  Checking this in Equation 2, we get 1 + a - 1 = a, which holds for all integers a.
  Therefore, the identity element under this function is 1, which corresponds to option 2

180. 14, 28, 20, 40, 32, 64, ... இந்தத் தொடரில் அடுத்து எந்த எண் வர வேண்டும்?

A) 56
B) 52
C) 128
D) 96

Explanation

- இதில், முதல் எண்ணை 2 ஆல் பெருக்கினால் வரும் எண்ணை பின்னர் 8 ஐக் கழிக்க வேண்டும்.

180. 14, 28, 20, 40, 32, 64, ... Which number should come next in this series?

A) 56
B) 52
C) 128
D) 96

Explanation:

- In this, multiply the first number by 2 and then subtract 8 from the resulting number.

181. ஒரு முக்கோணத்தின் கோணங்கள் 1 : 2 : 6 என்ற விகிதத்தில் உள்ளது. மிகச்சிறிய கோணம் என்ன?

A) 40 டிகிரி
B) 45 டிகிரி
C) 30 டிகிரி
D) 20 டிகிரி

Explanation

- முக்கோணத்தின் கோணங்களின் விகிதம் = 1 : 2 : 6
  x என்பதை மிகச்சிறிய கோணமாகக் கொள்க.
  x + 2x + 6x = 180 டிகிரி
  9x = 180 டிகிரி
  x = 20 டிகிரி

181. The angles of a triangle are in the ratio 1 : 2 : 6. What is the smallest angle?
A) 40 degrees
B) 45 degrees
C) 30 degrees
D) 20 degrees

Explanation:

Ratio of angles of a triangle = 1 : 2 : 6
Let x be the smallest angle.
x + 2x + 6x = 180 degrees
9x = 180 degrees
x = 20 degrees

182. A மற்றும் B என்ற இரண்டு தட்டச்சு செய்பவர்கள் உள்ளனர். ஒரு மதியம், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தட்டச்சு செய்ய 80 பக்கங்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் வேலையை சமமாகப் பிரித்தனர், ஆனால் A க்கு 40 நிமிடங்களுக்கு முன்னதாக B முடித்தார், அவர் அதற்கு 4 மணிநேரம் எடுத்தார். மறுநாள் மதியம், தட்டச்சு செய்ய மீண்டும் 121 பக்கங்கள் கொடுக்கப்பட்டன. இருப்பினும், இந்த முறை ஒரே நேரத்தில் தட்டச்சு செய்யும் வேலையை முடிக்க முடிவு செய்தனர். A எவ்வளவு பக்கங்களை தட்டச்சு செய்ய வேண்டும்?
A) 50 பக்கங்கள்
B) 77 பக்கங்கள்
C) 60 பக்கங்கள்
D) 55 பக்கங்கள்

Explanation

- A மற்றும் B இன் வேலை விகிதங்களின் விகிதம் = B இன் நேரம்/A இன் நேரம் = 4/3.333 = 1.2
  பக்கங்களின் விகிதம் = 1.2 : 1 = 6 : 5
  A இன் 121 பக்கங்களின் பங்கு = 5/11 × 121 = 55 பக்கங்கள்
  எனவே, A ஆனவர் 55 பக்கங்களை தட்டச்சு செய்ய வேண்டும்.

182. There are two typists A and B. In one afternoon, they were each given 80 pages to type. They divided the work equally, but B finished 40 minutes before A, who took 4 hours for it. The next afternoon, another 121 pages were given to type. However, this time they decided to complete the typing work at the same time. How many pages should A type?
A) 50 pages
B) 77 pages
C) 60 pages
D) 55 pages

Explanation:

- Ratio of work rates of A and B = B's time/A's time = 4/3.333 = 1.2
  Ratio of sides = 1.2 : 1 = 6 : 5

Share of 121 pages of A = 5/11 × 121 = 55 pages
So, A has to type 55 pages.

183. இந்தக் கோவையின் மதிப்பு என்ன?
(tan0° tan1° tan2° tan3° tan4° ...... tan89°)

A) 1
B) 1/2
C) 0
D) 2

Explanation

tan0° × tan1° × tan2° × ....... × tan89°
⇒ 0 × tan1° × tan2° × ....... × tan89°
⇒ 0

183. What is the value of this Coimbatore?
(tan0° tan1° tan2° tan3° tan4° ...... tan89°)

A) 1
B) 1/2
C) 0
D) 2

Explanation:

tan0° × tan1° × tan2° × ....... × tan89°
⇒ 0 × tan1° × tan2° × ....... × tan89°
⇒ 0

184. ஒரு பேட்ஸ்மேன் 15வது இன்னிங்ஸில் 97 ரன்கள் எடுத்தால் அவரது சராசரி 5 ஆக அதிகரிக்கிறது. 15-வது இன்னிங்ஸுக்குப் பிறகு அவரது சராசரியைக் கண்டறியவும்.

A) 15
B) 82
C) 27
D) 92

Explanation

- x என்பது 14 இன்னிங்ஸ்களுக்குப் பிறகு பேட்ஸ்மேனின் சராசரியாக இருக்கட்டும்.
  14 இன்னிங்ஸ்களில் பேட்ஸ்மேன் எடுத்த மொத்த ரன்கள் 14x என்பது நமக்குத் தெரியும்.
  கேள்வியின் படி:
  14x + 97 = 15(x + 5)
  14x + 97 = 15x + 75
  x = 22
  15வது இன்னிங்ஸுக்குப் பிறகு சராசரி = x + 22 = 5 + 22 = 27

184. If a batsman scores 97 runs in 15th innings his average increases by 5. Find his average after 15th innings.

A) 15
B) 82
C) 27
D) 92

Explanation:

- Let x be batsman's average after 14 innings.
  We know that the total runs scored by a batsman in 14 innings is 14x.
  According to the question:
  14x + 97 = 15(x + 5)
  14x + 97 = 15x + 75

x = 22
Average after 15th innings = x + 22 = 5 + 22 = 27

185. ஒரு பேருந்து P நிலையத்திலிருந்து Q நிலையத்திற்கு மணிக்கு 70 கிமீ வேகத்திலும், Q நிலையத்திலிருந்து P நிலையத்திற்கு மணிக்கு 90 கிமீ வேகத்திலும் பயணிக்கிறது. முழு பயணத்தின் போது பேருந்தின் சராசரி வேகம் என்ன?
A) 75.78 கிமீ/மணி
B) 78.75 கிமீ/மணி
C) 80.25 கிமீ/மணி
D) 82.35 கிமீ/மணி
Explanation
- சராசரி வேகம் = (2 × 70 × 90)/70 + 90 = 78.94 கிமீ/மணி
  எனவே, முழுப் பயணத்தின்போதும் பேருந்தின் சராசரி வேகம் மணிக்கு 78.94 கி.மீ

185. A bus travels from station P to station Q at a speed of 70 kmph and from station Q to station P at a speed of 90 kmph. What is the average speed of the bus during the entire journey?
A) 75.78 km/hr
B) 78.75 km/hr
C) 80.25 km/hr
D) 82.35 km/hr
Explanation:
- Average speed = (2 × 70 × 90)/70 + 90 = 78.94 km/h
  Therefore, the average speed of the bus during the entire journey is 78.94 kmph

186. ஒரு நிறுவனத்தில் ஆறு துறைகள் உள்ளன. கொடுக்கப்பட்ட பட்டை வரைபடம் 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது. நிறுவனம் 80 புதிய ஊழியர்களைச் சேர்த்தது மற்றும் சில ஊழியர்களை 2015 மற்றும் 2018 க்கு இடையில் பணிநீக்கம் செய்துள்ளது. பணிநீக்கம் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களும் C துறையைச் சேர்ந்தவர்கள். C துறையின் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்படாமல் இருந்திருந்தால், 2018 ஆம் ஆண்டில் C துறையின் பணியாளர் எண்ணிக்கை __ ஆக அதிகரித்திருக்கும்.
A) 12.5%
B) 20%
C) 17.5%
D) 10%
Explanation
- 2015 இல், அனைத்துத் துறைகளிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை = 20 + 40 + 50 + 70 + 80 + 30 = 290
  2018 இல், அனைத்துத் துறைகளிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை = 30 + 70 + 80 + 90 + 60 + 30 = 360
  வித்தியாசம் = 360 - 290 = 70
  சேர்க்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை = 80
  C இலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் = 80 - 70 = 10
  2018 இல் C இன் வலிமை = 80 (கொடுக்கப்பட்டது)
  பணி நீக்கம் செய்யப்படாமல் இருந்திருந்தால், 2018 இல் C இன் வலிமை = 80 + 10 = 90
  2018 ஆம் ஆண்டில் C துறையின் வலிமை = (10/80) × 100 ஆக அதிகரித்திருக்கும் ⇒ 12.5%

ஒரு தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களைக் காட்டும் ஹிஸ்டோகிராமைப் படித்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும்.

186. A company has six departments. The given bar graph shows the number of employees in each sector in 2015 and 2018. The company added 80 new employees and laid off some employees between 2015 and 2018. All the retrenched employees belong to C department. If the employees of Department C had not been retrenched, the number of employees in Department C would have increased by __ in 2018.

A) 12.5%
B) 20%
C) 17.5%
D) 10%

Explanation:

- In 2015, number of employees in all departments = 20 + 40 + 50 + 70 + 80 + 30 = 290
  In 2018, number of employees in all departments = 30 + 70 + 80 + 90 + 60 + 30 = 360
  Difference = 360 - 290 = 70
  Number of employees added = 80
  Employees dismissed from C = 80 - 70 = 10
  Strength of C in 2018 = 80 (Given)
  If there had been no layoffs, C's strength in 2018 = 80 + 10 = 90
  In 2018 the strength of sector C would have increased to = (10/80) × 100
  ⇒ 12.5%
  Read the histogram showing the marks obtained by students in a test and answer the following question.

187. 350 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை விட 200 முதல் 300 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை சதவீதம் அதிகம்?

A) 55%
B) 25%
C) 30%
D) 40%

Explanation

தேவையான சதவீதம் = (105 - 75)/75 x 100
⇒ 30/75 x 100
⇒ 40%
∴ பதில் 40%.

187. The number of students who scored 200 to 300 is by what percent more than the number of students who scored 350 or more?

A) 55%
B) 25%
C) 30%
D) 40%

Explanation:

Required percentage = (105 - 75)/75 x 100
⇒ 30/75 x 100
⇒ 40%
∴ Answer is 40%.

188. பின்வரும் பட்டை வரைபடத்தைப் படித்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும். கொடுக்கப்பட்ட காலத்திற்கான சராசரியை விட எத்தனை ஆண்டுகளில் ஏற்றுமதி அதிகமாக இருந்தது?

A) 3
B) 5
C) 6
D) 4

Explanation

- ஆண்டுகளுக்கு சராசரி ஏற்றுமதி வைரங்கள் = மொத்த ஏற்றுமதி / வருடங்களின் மொத்த எண்ணிக்கை
  ⇒ (7.2 + 8.5 + 9.8 + 10.9 + 11.8 + 11.5 + 12.4)/7 = 72.1/7
  ⇒ 10.3 கோடி
  கொடுக்கப்பட்ட 4 ஆண்டுகளில், ஏற்றுமதி சராசரி ஏற்றுமதியை விட அதிகமாக உள்ளது:
  ⇒ 2011 = 10.9 கோடிகள்
  ⇒ 2012 = 11.8 கோடிகள்
  ⇒ 2013 = 11.5 கோடி
  ⇒ 2014 = 12.4 கோடிகள்
  ∴ சராசரி ஏற்றுமதியை விட ஏற்றுமதி அதிகமாக இருக்கும் ஆண்டுகளின் எண்ணிக்கை 4 ஆகும்.

188. Read the following bar graph and answer the following question.
In how many years were the exports higher than the average for the given period?

A) 3
B) 5
C) 6
D) 4

Explanation:

- Average exports of diamonds in years = total exports / total number of years
  ⇒ (7.2 + 8.5 + 9.8 + 10.9 + 11.8 + 11.5 + 12.4)/7 = 72.1/7
  ⇒ 10.3 crores
  In the given 4 years, the export is more than the average export:
  ⇒ 2011 = 10.9 crores
  ⇒ 2012 = 11.8 crores
  ⇒ 2013 = 11.5 crores
  ⇒ 2014 = 12.4 crores
  ∴ Number of years in which export is more than average export is 4.

189. 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் மொத்த ஏற்றுமதியின் விகிதம் 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் மொத்த இறக்குமதியின் விகிதம் என்ன?

A) 6 : 7
B) 3 : 2
C) 5 : 6
D) 14 : 15

Explanation

- 2015 & 2018 இல் இறக்குமதியின் தொகை = 390 + 450 = 840 கோடி
  2014 & 2017 இல் ஏற்றுமதியின் தொகை = 300 + 420 = 720 கோடி
  ∴ தேவையான விகிதம் = 720 : 840
  ⇒ 6 : 7

189. What is the ratio of total exports of 2014 and 2017 to total imports of 2015 and 2018?

A) 6 : 7

B) 3 : 2
C) 5 : 6
D) 14 : 15

Explanation:

- Amount of imports in 2015 & 2018 = 390 + 450 = 840 crores
  Amount of exports in 2014 & 2017 = 300 + 420 = 720 crores
  ∴ Required ratio = 720 : 840
  ⇒ 6 : 7

190. சில தரவுகளின் சராசரி மற்றும் முகடு முறையே 4 & 10 எனில், அதன் இடைநிலையைக் காண்க?

A) 1.5
B) 5.3
C) 16
D) 6

Explanation

- தரவின் சராசரி = 4 மற்றும் தரவின் முகடு = 10
  முகடு = 3(இடைநிலை) - 2(சராசரி)
  ⇒ 10 = 3(இடைநிலை) - 2(4)
  ⇒ 3(இடைநிலை) = 18
  ⇒ இடைநிலை = 6
  எனவே, தரவுகளின் இடைநிலை 6 ஆக இருக்கும்

190. If the mean and peak of some data are 4 & 10 respectively, find its median?

A) 1.5
B) 5.3
C) 16
D) 6

Explanation:

- Median of data = 4 and peak of data = 10
  Crest = 3(median) - 2(mean)
  ⇒ 10 = 3(intermediate) - 2(4)
  ⇒ 3(intermediate) = 18
  ⇒ Median = 6
  Hence, the median of the data will be 6

191.3x2 + ax + 4 ஆனது x – 5 ஆல் முழுமையாக வகுபடுமானால், a இன் மதிப்பு என்ன?

A) -12
B) -5
C) -15.8
D) -15.6

Explanation

- 3x2 + ax + 4 ஆனது x – 5 ஆல் முழுமையாக வகுபடும்.
  ⇒ 3 × 25 + 5a + 4 = 0
  ⇒ 5a = -79
  ∴ a = -15.8

191.If 3x2 + ax + 4 is exactly divisible by x – 5, what is the value of a?

A) -12
B) -5
C) -15.8
D) -15.6

Explanation:

3x2 + ax + 4 is exactly divisible by x – 5.
⇒ 3 × 25 + 5a + 4 = 0
⇒ 5a = -79
∴ a = -15.8

192. 0, 1, 2, 3 __ 9 இன் திட்ட விலக்கம் K எனில், 10, 11, 12, 13 __ 19 இன் திட்ட விலக்கம் என்ன?

A) K + 1
B) K
C) K + 4
D) K + 8

Explanation

- ஒவ்வொரு தரவும் 10 ஆக அதிகரிப்பதால்,
  திட்ட விலக்கத்தில் எந்த மாற்றமும் இருக்காது, ஏனெனில் (xi – x) அப்படியே உள்ளது.
  ∴ 10, 11, 12, 13 __ 19 இன் திட்ட விலக்கம் K ஆக இருக்கும்.

192. If the plan deviation of 0, 1, 2, 3 _ 9 is K, what is the plan deviation of 10, 11, 12, 13 __ 19?

A) K + 1
B) K
C) K + 4
D) K + 8

Explanation:

- As each data increments by 10,
  There will be no change in project deduction because (xi – x) remains the same.
  ∴ Planned deduction of 10, 11, 12, 13 _ 19 will be K.

193. 5, 6, 7, 8, 9 என்ற தொடர்முறை இலக்கங்களிலிருந்து எத்தனை 3 இலக்க ஒற்றைப்படை எண்களை உருவாக்க முடியும் ?

A) 55
B) 75
C) 70
D) 85

Explanation

- 3 இலக்க எண்களின் முறையே H T U (நூற்றிடத்திலக்கம் (Hundreds), பத்தினிடத்திலக்கம் (tens), ஒன்றினிடத்திலக்கம் (unit digit)) என எடுத்துக்கொள்வோம்
  3 இலக்க ஒற்றைப்படை எண்ணை உருவாக்கவும்
  5, 7, 9 ஆகியவை ஒன்றினிடத்திலக்க இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்படலாம்
  நூற்றிடத்திலக்க மற்றும் பத்தினிடத்திலக்க இடங்களில் 5 இலக்கங்களும் சாத்தியமாகும்
  ஒன்றினிடத்திலக்கத்திற்கான வழிகளின் எண்ணிக்கை = 3
  பத்தினிடத்திலக்கத்திற்கான வழிகளின் எண்ணிக்கை = 5
  நூற்றிடத்திலக்கத்திற்கான வழிகளின் எண்ணிக்கை = 5
  3 இலக்கங்களின் ஒற்றைப்படை எண்களின் எண்ணிக்கை = 3 × 5 × 5 = 75
  ∴ 5, 6, 7, 8, 9 ஆகியவை தொடர்முறை இலக்கங்கள் எனில், இந்த இலக்கங்களிலிருந்து 75 மூன்று இலக்க ஒற்றைப்படை எண்களை உருவாக்க முடியும்

193. How many 3-digit odd numbers can be formed from the consecutive digits 5, 6, 7, 8, 9 ?

A) 55
B) 75
C) 70
D) 85

Explanation:

- Let us take the sequence of 3 digit numbers as H T U (Hundreds, Tens, Unit Digit)
  Create a 3 digit odd number
  5, 7, 9 can only be used in single digits
  5 digits are possible in both hundreds and decimal places
  Number of ways to zero = 3
  Number of ways to decimal = 5
  Number of ways to decimal = 5
  Number of 3 digit odd numbers = 3 × 5 × 5 = 75
  ∴ If 5, 6, 7, 8, 9 are consecutive digits, then 75 three-digit odd numbers can be formed from these digits.

194.பைக்கின் விலை ரூ. கடந்த ஆண்டு 75000. இந்த ஆண்டு விலை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு பைக்கின் விலை என்ன?

A) ரூ.50000
B) ரூ.60000
C) ரூ.80000
D) ரூ.90000

Explanation

- கடந்த ஆண்டு பைக்கின் விலை ரூ. 75000. விலை 20% அதிகரித்துள்ளது.விலை அதிகரிப்பு = \(\frac{20}{100}\)×75000=15000
  புதிய விலை = பழைய விலை + விலை அதிகரிப்பு = 75000 + 15000 = 90000.

194. The price of the bike is Rs. 75000 last year. This year the price has increased by 20 percent. What is the price of the bike this year?

A) Rs.50000
B) Rs.60000
C) Rs.80000
D) Rs.90000

Explanation:

- Last year the price of the bike was Rs. 75000. The price has increased by 20%.
- Price increase = \(\frac{20}{100}\)×75000=15000
  New Price = Old Price + Price Increase = 75000 + 15000 = 90000

195.ஒரு பொருளுக்கு ரூ. 5000 ஆனால் விற்கப்பட்டது ரூ. 4500. தயாரிப்பில் வழங்கப்படும் % தள்ளுபடி என்ன?

A) 5
B) 10
C) 15
D) 20

Explanation

- பொருளின் குறிக்கப்பட்ட விலை ரூ. 5000. பொருளின் தள்ளுபடி விலை ரூ. 4500.
  தள்ளுபடி = குறிக்கப்பட்ட விலை – விற்பனை விலை = 5000 – 4500 = 500

195. Per item Rs. 5000 but sold for Rs. 4500. What is the % discount offered on the product?

A) 5
B) 10
C) 15
D) 20

Explanation:

- The marked price of the product is Rs. 5000. The discounted price of the item is Rs. 4500.
- Discount = Marked Price – Selling Price = 5000 – 4500 = 500

196.சட்டையின் பட்டியல் விலை ரூ. 2500. பொருளுக்கு 30% தள்ளுபடி உண்டு. சட்டைக்கு என்ன தள்ளுபடி வழங்கப்படுகிறது?
A) ரூ.1750
B) ரூ.4500
C) ரூ.1500
D) ரூ.750

Explanation

- சட்டையின் பட்டியல் விலை ரூ. 2500. பொருளின் மீதான தள்ளுபடி 30%

196. The list price of the shirt is Rs. 2500. The item is 30% off. What discount is given on the shirt?
A) Rs.1750
B) Rs.4500
C) Rs.1500
D) Rs.750

Explanation:

- The list price of the shirt is Rs. 2500. 30% discount on product

197.இரண்டு மாணவர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் மற்றவரை விட 9 மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார், அவருடைய மதிப்பெண்கள் அவர்களின் மதிப்பெண்களின் கூட்டுத்தொகையில் 56% ஆகும். அவர்கள் பெற்ற மதிப்பெண்கள்:
A) 39, 30
B) 41, 32
C) 42, 33
D) 43, 34

Explanation

- அவர்களின் மதிப்பெண்கள் இருக்கட்டும் (எக்ஸ்+ 9) மற்றும்எக்ஸ்.
  பிறகு,எக்ஸ்+ 9 = 56 (x+ 9 +x)
  100
  25(x+ 9) = 14(2x+ 9)
  3x= 99
  x= 33
  எனவே, அவர்களின் மதிப்பெண்கள் 42 மற்றும் 33 ஆகும்.

197. Two students appeared in the exam. One of them has scored 9 marks more than the other and his marks are 56% of the sum of their marks. Marks obtained by them:
A) 39, 30
B) 41, 32
C) 42, 33
D) 43, 34

Explanation:

- Let their scores be (X+ 9) and X.

Then, x+ 9 = 56 (x+ 9 +x)
100
25(x+9) = 14(2x+9)
3x = 99
x= 33
Hence, their scores are 42 and 33.

198.40% குழுவினர் தேநீரை ஒரு பானமாக விரும்புகிறார்கள். குழுவில் டீயை ஒரு பானமாக விரும்புபவர்களின் விகிதம் என்ன?
A) 3/7
B) 2/5
C) 2/10
D) 4/3
Explanation
- 40% குழுவினர் தேநீரை ஒரு பானமாக விரும்புகிறார்கள். குழுவில் தேநீரை பானமாக விரும்புவோரின் விகிதம் .
  =40/100

198 .40% group prefers tea as a beverage. What proportion of the group prefers tea as a drink?
A) 3/7
B) 2/5
C) 2/10
D) 4/3
Explanation:
- 40% group prefers tea as a beverage. Proportion of those who prefer tea as a drink in the group .
  =40/100

199. ஜெய்ன் கச்சேரிக்கான டிக்கெட்டுகளை ரூ. 3500. அவர் அவற்றை 15% தள்ளுபடியில் விற்க விரும்புகிறார். ரூ. தள்ளுபடி என்ன?
A) ரூ.1525
B) ரூ.350
C) ரூ.525
D) ரூ.1050
Explanation
- விளக்கம்: டிக்கெட் வாங்கும் விலை ரூ. 3500. டிக்கெட்டுகளுக்கான தள்ளுபடி 15%

199. Jain concert tickets for Rs. 3500. He wants to sell them at 15% discount. Rs. What is the discount?
A) Rs.1525
B) Rs.350
C) Rs.525
D) Rs.1050
Explanation:
- Ticket purchase price is Rs. 3500. 15% discount on tickets

200. 1 முதல் 70 வரையிலான எண்களில் எத்தனை சதவீதம் அலகு இலக்கத்தில் 1 அல்லது 9 உள்ளது?
A) 1
B) 14
C) 20
D) 21

Explanation

- அலகு இலக்கத்தில் 1 அல்லது 9 உள்ள எண்கள், இலக்கம் 1 இல் முடிவடையும் சதுரங்களைக் கொண்டிருக்கின்றன. 1 முதல் 70 வரையிலான அத்தகைய எண்கள் 1, 9, 11, 19, 21, 29, 31, 39, 41, 49, 51, 59, 61, 69.
  அத்தகைய எண்ணின் எண்ணிக்கை =14
  தேவையான சதவீதம் = 14 /70 x 100 % = 20%

200. What percent of the numbers from 1 to 70 have 1 or 9 in the units digit?

A) 1
B) 14
C) 20
D) 21

Explanation:

- Numbers with a units digit of 1 or 9 have squares ending in the digit 1. Such numbers from 1 to 70 are 1, 9, 11, 19, 21, 29, 31, 39, 41, 49, 51, 59, 61, 69.
- The sum of such a number =14
- Required percentage = 14 /70 x 100 % = 20%

tnpscbooks tnpscbooks tnpscbooks tnpscbooks